விலை சதம் 25. தொலைபேசி 23411

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆனி 8உ (22-6-71) செவ்வாய் ந.ஆகிர் பிறை 28 புத்தகம் 25 இதழ் 31

# மலையகத் தமிழருக்கு மற்றுமோர் பேரிடி!

## தொழிலைப் பறிக்கிறது புதிய சட்டம்! தோணியேற்றுவதே அரசின் திட்டம்!!

மலையகத்தமிழர்களுக்கு மற்றுமோர் பேரிடி! 1967ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை நம்பி தங்களை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொண்டுள்ள பல்லாயிரக் கணக்கான மலையகத் தமிழர்களின் தொழிலைப் பறிக்கும் மசோதா ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருப்பது, அம்மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் நம்பிக்கைத் துரோகமென்று தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இம்மசோதாவின் உள் நோக்கம், தங்களை இந்தி

(11-ம் பக்கம் பார்க்க)

## "குடியேற்றதிட்டங்களினால் தமிழர், முஸ்லிம்களுடைய பாராளுமன்றபிரதிநிதித்துவம் பறிபோகிறது" —தர்மலிங்கம்

இன்று நடைமுறையிலிருக்கும் தொகுதி நிர்ணய முறை சிறுபான்மையினருக்கு பாராளுமன்றத்தில் போதிய



பிரதிநிதித்துவம் கிடைக்காமல் தடுக்கிறது. அதே வேளையில் பெரும்பான்மை இனத்துக்கே செல்வாக்கையும் எண்ணிக்கையையும் அதிகரித்து வருகிறது. அதனால்தான் 107 சிங்களப் பிரதிநிதிகள் இருக்கவேண்டிய இடத்தில் 123 பேர் உள்ளார்கள். இதனால்தான் இன்றைய தொகுதி முறையை மாற்றியமைக்க வேண்டுமென தமிழரசுக்கட்சி கோருகின்றது.

அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினால் சிறுபான்மை இனங்களுக்குரிய பாராளுமன்ற ஆசனங்கள் பறிபோகின்றன. முஸ்லிம்களுக்கு சேரவேண்டிய அம்பாறை பறிபோய்விட்டது. முஸ்லிம்கள் பரம்பரையாக வசித்து வந்த புத்தளமும் பறிபோய்க் கொண்டிருக்கிறது.

—இவ்வாறு இவ்வாரம் அரசியல் நிர்ணய சபையில் உரையாற்றிய உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

சனத்தொகையின் அடிப்படையில் அல்லாது பிரஜை

(11ம் பக்கம் பார்க்க)

உள்ளே....

சிமோலுக்கு ஒரு 'சிமோல்' சவால் —பக்கம் 2
அரசியல் மடல் —பக்கம் 3
ஜெயக்கொடி முழக்கம் —பக்கம் 2
கருணாநிதியின் வீரவுரை —பக்கம் 6
அன்பழகன் பேச்சு —பக்கம் 8
தொடர் கதை பக்கம் 9
கவிஞர் சுரதாவின் 'எச்சில் இரவு' —பக்கம் 10

## மொழிக் கோரிக்கை; அரசு கைவிரிப்பு அ.நி.சபையை தமிழரசு பகிஷ்கரிக்கும்?

புதிய அரசியல் திட்டத்தில் இடம்பெறவேண்டிய தமிழ் மொழியின் உரிமை சம்பந்தமாக தமிழரசுக்கட்சியினர் பிரதமரிடமும், அரசியல் திட்ட விவகார அமைச்சரிடமும் சமர்ப்பித்திருந்த கோரிக்கைகள் அரசாங்கத்தினால் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளனவென்று தெரியவருகிறது.

தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமையாகிய இந்த மொழியுரிமைக் கோரிக்கைகள் அரசாங்கத்தினால் ஏற்கப்படாததையடுத்து, அரசியல் நிர்ணய சபையில் அரசாங்கத்தின் மொழித் தீர்மானம் விவாதத்துக்கு வரும்பொழுது, தமிழரசுப் பிரதிநிதிகள் பதின்மூன்று பேரும் அதை எதிர்த்து வாக்களித்துவிட்டு, சபையைப் பகிஷ்கரித்து வெளிநடப்பு செய்வது பெரும்பாலும் இப்போது உறுதியாகிவிட்டது!

21-6-71-ல் யாழ்ப்பாணத்தில் மீண்டும் கூடும் தமிழரசுப் பொதுச் சபை, இதை ஊர்ஜிதப் படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது!

தமிழ் மொழியுரிமைகள் சம்பந்தமாக அரசாங்கத்துடன் சமாதானமான முறையில் தீர்வுகாணத் தாம் தயாராக இருப்பதாக அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுத் தந்தை கூறியிருந்தது தெரிந்ததே.

பயிற்சி மொழிப் பிரச்சினையில் தமிழரசுக் கட்சி கொண்டுவந்திருந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டபோதிலும் ஏனைய தமிழ்மொழியுரிமைகள் குறித்து, தமிழினத்தின் குறைந்தபட்சக் கோரிக்கைகளை அரசாங்கத்தைக் கொண்டு ஏற்கவைக்க செய்வதில் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள், தொடர்ந்து முயற்சிசெய்து வந்தார்கள். இது சம்பந்தமாக, சபாநாயகர், அரசியல் திட்டவிவகார அமைச்சர்

(11-ம் பக்கம் பார்க்க)

## மூதவையில் நிறைவேறிய எதிர்க்கட்சித் திருத்தங்கள்!

அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு மூதவையில் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்திருந்த பின் கண்ட மூன்று திருத்தங்களும் மூதவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

● இதுவரை ஒருபோதும் இல்லாதளவு அதிகரித்திருக்கும் வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கும் வேலையின்மை, அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் தட்டுப்பாடு, வீட்டுவசதி ஆகிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும்போதியநடவடிக்கைகளை மேன்மை தாங்கிய தங்

(11-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசுப் பிரேரணைக்கு மூதவையில் வெற்றி!

அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு தமிழரசுக் கட்சி இரண்டு திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்திருந்ததல்லவா? அதில் ஒரு பிரேரணை மூதவையில் இவ்வாரம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. "இலங்கை வாழ் மக்களை—குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களை இப்போது எதிர்நோக்கியுள்ள பெருமளவிலான வேலையின்மைப் பிரச்சினையை ஒழிப்பதற்கு ஆக்கபூர்வமான பயனளிக்கக் கூடிய நடவடிக்கைகளை தங்கள் அரசாங்கம் மேற்கொள்ளுமென மேன்மைதங்கிய தங்களது உரையில் குறிப்பிடத் தவறியுள்ளதையிட்டு வருந்துகிறோம்! —இதுவே மூதவையில் நிறைவேற்றப்பட்ட தமிழரசுக் கட்சியின் திருத்தப் பிரேரணையாகும்.

'எந்த மனிதனுக்கும் நியாயமானதைச் செய்யத்தான் உரிமையுண்டு. தன் விருப்பம்போல் செய்வதற்கு உரிமையில்லை.'

ஸி. ஸிம்மன்ஸ்.

காலம் பெறுமதியானது. காலத்தை வீணாக்காதீர்கள். மில்க் வைற் சலவை பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப் படுத்துங்கள். பாவித்த மேலுறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# சிமோலுக்கு ஒரு 'சிமோல்' சவால்!

தமிழே தமிழ்பிள்ளைகளின் போதனாமொழியாக இருக்க வேண்டுமென்ற தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை சிங்கள மக்களை எவ்விதத்திலுமே பாதிக்காத ஒரு கோரிக்கை; இந்தக் கோரிக்கையையே தாராளமனதுடன் ஏற்றுக்கொள்ள முன்வராத அரசியல் நிர்ணய சபை தமிழ் இனத்தின் ஏனைய மொழியுரிமைக் கோரிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போன்றதாகும் என்று சென்றவாரம் இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தோம்!

நாம் எதிர்பார்த்தது போலவே நடந்திருக்கிறது!

தமிழினத்தின் குறைந்த பட்ச மொழியுரிமைக் கோரிக்கைகளை அரசாங்கத்தைக் கொண்டு ஏற்றுக் கொள்ளும்படி செய்வதில் தமிழரசுக்கட்சி தலைவர்கள் எடுத்த பிரயத்தனங்கள் அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராக முடிந்து விட்டதாக அறிகிறோம்:

தமிழரசுத் தலைவர்கள் அரசாங்கக் கட்சித் தலைவர்களுடன் தமிழ் மொழியுரிமைகள் சம்பந்தமாகப் பேசிய பின்னர் கடைசியாக நடந்த அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இப்போதைய அடிப்படைத் தீர்மானங்களை அப்படியே எவ்வித திருத்தமுமின்றியே நிறைவேற்றுவது என்று முடிவு செய்யப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன!

இதன் பொருள் தமிழ்மக்களின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள மொழியுரிமைக் கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதாகும். தமிழினத்துக்கும் தமிழ்மொழிக்கும் குழிபறிக்கும் அரசாங்கத்தின் இப்போதைய அடிப்படைத் தீர்மானங்கள் அனைத்தும் அப்படியே அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்படவிருக்கின்றன என்பது இப்போது தெளிவாகிவிட்டது!

ஆம், அரசாங்க நிர்வாகத்திலும் நீதிமன்றங்களிலும், சிங்கள மொழி மட்டுமே தமிழ் மக்களின் தொண்டைக்குள் புகுத்தப்படவிருக்கிறது: தமிழர் பூமியிலும் சிங்களம் மட்டும் சட்டமே கொடிகட்டி ஆளப்போகிறது! இதற்கு வழிவகுக்கின்றன அரசாங்க மொழி, நீதிமன்ற மொழி சம்பந்தப்பட்ட 12ம், 23ம் அடிப்படைத் தீர்மானங்கள்!

இத்தீர்மானங்களுக்கு தமிழரசுக்கட்சி, தமிழினத்தின் சார்பில் கொண்டுவரப்போகும் திருத்தங்கள், அரசியல் நிர்ணய சபையில் தோற்கடிக்கப்படுமானால் தமிழரசுப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரிப்பார்களென்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது!

இத்தகைய ஒரு நிலை ஏற்படும்போது. அரசாங்கக்கட்சியில் அங்கம் வகிக்கும் நான்கு தமிழ் பிரதிநிதிகளும் பெரியதோர் கேள்விக்குறியாக மாறத்தான்போகிறார்கள்!

தமிழரசுப் பிரதிநிகள்—தமிழினத்தின் பெரும்பான்மைப் பிரதிநிதிகள்—தமிழினத்துக்கு கொள்ளி வைக்கும் புதிய அரசியல் சட்டத்துக்கு ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்து வெளியேறியபின் கோடரிக்காம்புகளே உங்களுக்கு அரசியல் நிர்ணயசபையில் என்னவேலை என்றுகேட்டு தமிழ் மக்கள் இந்த நான்கு பேரையும் நோக்கிக் கண்டனக் குரல் எழுப்பமாட்டார்களா? காறி உமிழ மாட்டார்களா?

அதை எதிர்பார்த்து அதிலிருந்து தப்புவதற்காக இப்பொழுதே பிதற்றத் தொடங்கியிருக்கிறார் நல்லூர் பா. உ. திரு. அருளம்பலம்!

'புதிய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் போதனாமொழி, பட்டப்படிப்பு வசதி, உத்தியோக மொழி, நீதிமன்றமொழி விடயங்களில் தமிழ்மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படுவதோடு சகல உரிமைகளும் நிச்சயம் கிடைக்கும்' என்று 16-6-71 தினகரனில் முன்பக்க அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார் திரு. அருளம்பலம்!

அருளம்பலம் இந்நாட்டுத் தமிழர்களை அரசியல் அறியாத வெறும் மூடர்கள் என்று நினைத்துவிட்டாரா அல்லது அருளம்பலத்தின் அரசியலறிவு இவ்வளவு பூஜ்யமானதா என்பது நமக்கு விளங்கவில்லை!

தமிழ் பயிற்சிமொழிக் கோரிக்கை தூக்கியெறியப்பட்டுவிட்டது அரசியல் நிர்ணயசபையினால்!

உயர்கல்வி வழங்குவதில் திறமை அடிப்படையில் சம சந்தர்ப்பங்கள் தரப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கும் அதே கதி நேர்ந்திருக்கிறது.

இந்நிலையில், உத்தியோகமொழி, நீதிமன்ற மொழிபோன்ற பிரச்சினைகளிலும், தமிழினத்தின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள மொழியுரிமைக் கோரிக்கைகள் ஏற்கப்படுமென்ற நம்பிக்கையும் இப்போது சிதைந்துவிட்டது!

எனவே தமிழினத்திற்கு இனிவேறு எந்த 'உரிமைகள்' கிடைக்கப்போவதாக அருளம்பலம் கனவு காணுகிறார்? தமிழ் மொழி சம்பந்தமாக இன்னின்ன உரிமைகளைத் தருவோம் என்று அரசாங்கம் அருளம்பலத்துக்கு ஏதாவது உறுதிமொழி தந்திருக்கிறதா? அப்படித் தந்திருந்தால் அதை பகிரங்கப் படுத்துவாரா?

'அரசியல் நிர்ணய சபையில் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடிப்படை பிரேரணைகள் உண்மையான [illegible] கள் அல்ல; அவை சட்டமாக வரும்போது தமிழ் [illegible] பாதுகாப்பு வழங்கும் தகுந்த பெரும் அரணாகவே விளங்கும், என்றும் கூறியிருக்கிறார் அருளம்பலம்!

# 'சிங்கள ஏகாதிபத்தியத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறது ஈழத் தமிழினம்!'

## அ. நி. சபையில் ஜெயக்கொடி!

இந்தத் திருத்தப் பிரேரணையின் மீது நான் பேசுவதற்கு முன், தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்று அவ்வளவு சரியாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது வரியில்,


"தாய் மொழி மூலம் கல்வி பெறும் உரிமை உடையதாயிருத்தல் வேண்டும்"

என மொழி பெயர்த்தது சரி அல்ல. அது,

"தாய் மொழி மூலம் தான் கல்வி பெறும் உரிமை உடையதாயிருத்தல் வேண்டும்" என மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

1948ம் ஆண்டில் இலங்கை நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் முழுமை பெற்றதாக இல்லை என்ற காரணத்தினால் தான் தற்போது அரசியல் நிர்ணய சபையொன்றை நிறுவி இறைமை கொண்ட ஆதிபத்தியக் குடியரசை நிலைநாட்டுவதற்கு ஆவன செய்திட முயல்கிறோம். நாட்டுக்கு முழுமை பெற்ற சுதந்திரம் வேண்டும் எனக் கூறும்போது அந்த நாட்டில் வாழும் மக்கள் எல்லோருக்கும் அச்சுதந்திரம் வழங்கப்படவேண்டும்; அதன் விளைவாக சாதி, சமய, இன, மொழி வேறுபாடின்றி சமத்துவ, சமதர்ம, சகோதரத்துவ அடிப்படையில் யாவரும் அமைதியையும் இன்பத்தையும் பெற்று வாழ்ந்திட வேண்டும் என்ற நோக்குடனேதான் இந் நிர்ணய சபையிலே சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். முழுமைபெற்ற சுதந்திரம் இலங்கையில் வாழ்கின்ற அத்தனை பேருக்கும் கிடைத்திடுமா என்ற ஐயப்பாடு தமிழ் பேசும் மக்களுடைய உள்ளங்களிலே நாளும் ஒலித்த வண்ணம் உள்ளது.

இடையறாத மனத் துன்பத்துக்கும் இன்னலுக்கும் இடருக்கும் ஆளாகி வருங்காலத்தில் அனாதைகளாய், நடைப்பிணங்களாய் ஆகிவிடுவோமோ என்ற அச்சம் குடிகொண்ட மனத்தினராய் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்திடும் அவல நிலையைச் சுட்டிக்காட்ட வேண்டியது அம் மக்களின் பிரதிநிதிகளில் ஒரு



வனாகிய எனது கடமையாகும்.

### தமிழர் சிறுபான்மையா?

தமிழ் பேசும் மக்களை சிறுபான்மை இனமெனக் சிறுமைப் படுத்தி அவமதிப்புத் தந்திடும் இந்த அவல நிலை எப்போது ஏற்பட்டது என்பதை வரலாற்று அடிப்படையில் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டிய கால கட்டத்தில் வாழ்கிறோம்.

போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் ஈழநாட்டைக் கைப்பற்றி ஏதேச்சாதிகார ஆட்சி புரிவதற்கு முன்பு ஒரு மொழி பேசும் ஓர் இனம் கொண்ட ஒரு நாடாக இலங்கை திகழ்ந்ததா? இல்லை இரு மொழி பேசும் இரு இனம் கொண்ட இரு வேறு அரசுகளையுடைய ஈழமாகத் திகழ்ந்தது.

தமிழ் ஈழத்தை சங்கிலி மன்னன் ஆண்டான் போர்த்துக்கேய ஆதிக்கத்தை எதிர்த்து அடிபணியாது ஆண்மையுடன் போர் புரிந்து வீர மரணம் எய்தினான். டச்சுக்காரருடைய ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்து பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வரிகொடுக்க மறுத்து ஈழத் தமிழகத்தின் விடுதலையைப் பேணிப் பாதுகாத்தான் பனங்காமத்தை ஆண்ட அரசன் கயிலை வன்னியன், அந்த வீரகேசரி இறந்த பின்பு அவனது பேரப்பிள்ளையினுடைய காலத்திலேதான் டச்சுக்காரரால் அந்நாட்டைக் கைப்பற்ற முடிந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அஞ்சாது போர் புரிந்து வீர மரணம் எய்தினான் பண்டார வன்னியன் என்னும் மன்னன்.

### தனி ஆட்சி

இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் காட்டுவதென்ன? அந்நியராகிய போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும் பிரிட்டிஷ்காரரும் காலெடுத்து வைப்பதற்கு முன்பு முடியும் கொடியும் முத்தமிழும் கொண்ட ஆண்ட தனியரசைப் பெற்றிருந்தனர் தமிழர்கள். அன்று தமிழர்கள் தமிழர்களாய் வாழ்ந்தனர்; தமிழ் அரசைப் பெற்றிருந்தனர். தனி ஆட்சி நடத்தினர் என்பனவற்றையே நாம் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகள் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. எனவே, அந்நியரின் வருகைக்குப் பின்னர்தான் தமிழர்கள் சிறுபான்மை இனம் என்ற அவச்சொல்லை ஏற்க நேரிட்டது. அந்நியரால் சுமத்தப்பட்ட இழிசொல்லை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி நம்மை அவமரியாதைக்கும் அவஸ்தைக்கும் ஆளாக்கி வருகிறது ஆளும் அரசு.

### அவல நிலை

ஒரு நாட்டில் பூரண சுதந்திரத்தை அங்கு வாழும் மக்கள் அனுபவிக்க வேண்டும் என்றால் அந் நாட்டில் வாழும் எல்லா மக்களும் எல்லாத் துறையிலும் சம வாய்ப்புப் பெற்று வாழவேண்டும். வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, குடியுரிமை, மொழியுரிமை, தாங்கள் வாழும் பிரதேசத்தில் பயமின்றி வாழக் கூடிய சுமுகமான நிலை இவை இங்கு எல்லாருக்கும் உண்டா? வேலை

(11-ம் பக்கம் பார்க்க)

ஆம், தமிழரசுப் பிரதிநிதிகள் அ. நி. சபையிலிருந்து வெளியேறிய பின்னரும் தாமும் தமது சகாக்களும் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு இப்பொழுதே நொண்டிச் சாட்டுக் கூறத் தொடங்கியிருக்கிறார் அருளம்பலம்!

இப்போதைய அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் சட்டங்களல்ல என்பது நமக்குத்தெரியும். ஆனால் அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொண்டுள்ள இந்த அடிப்படைத்தீர்மானங்களுக்கு அமையவே புதிய அரசியல் சட்டம் எழுதப்பட இருக்கிறது. அரசியல் நிர்ணய சபையினால் ஏற்றுக்கொள்ளப்படாத எத்தகைய முக்கிய அம்சமும் அரசியல் சட்டத்திலிடம் பெறப்போவதில்லை; இடம்பெறவும் முடியாது.

இது புரியாமல் அருளம்பலம் தமிழ்மக்களை ஏமாற்றலாம் என்று கருதுகிறார்போலும்! ஆனால் தமிழ் மக்கள் அவ்வளவு தூரம் அரசியல் மூடர்களல்லர் என்பதை அருளம்பலம் உணரவேண்டும்!

அருளம்பலத்தையும் ஏனைய இரு தமிழ் காங்கிரஸ் பா. உ.க்களையும் நாம் ஒன்றுகேட்கிறோம்.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள அரசியலமைப்பு அடிப்படைத்தீர்மானங்கள் தமிழ்மக்களின் உரிமைகளுக்கு தக்கபாதுகாப்பு தருவனவாக இல்லை என்று கருதியதால்தானே திரு. தியாகராசாவின் பெயரில் ஏராளமான திருத்தங்களை அரசியல் நிர்ணய சபையில் கொண்டுவரப் போவதாக முன்னறிவித்தால் கொடுத்தீர்கள். பின் அரசாங்கக்கட்சியுடன் இரண்டறக்கலந்தவுடன் அவற்றை வாபஸ் பெற்றீர்கள்.

அரசாங்கத்தில் சேர்வதற்கு முன் தமிழ்மக்களுக்கு பாதகமானது என்று நீங்கள் கருதிய அதே அடிப்படைத்தீர்மானங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்த பின் 'பாதுகாப்பு அரணாக' இப்போது மாறிவிட்டது எப்படி? ஏன்தான் தமிழினத்தை இப்படி காட்டிக் கொடுத்து முதுகில் குத்துகிறீர்கள்?

உங்களுக்கு ஒரு சவால் விடுகிறோம்—உங்களுக்கு சக்தியிருந்தால்—தியாகராசாவின் பெயரால் தமிழ் மொழியுரிமை சம்பந்தமாக அரசியல் நிர்ணய சபை ஒழுங்குப்புத்தகத்தில் இடம் பெற்றிருந்த திருத்தப் பிரேரணைகளில் ஒன்றையாவது அரசாங்கத்தைக் கொண்டு ஏற்க வைத்து அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றுவிக்க முடியுமா?

[illegible] ஒத்துழைப்பு ஒத்துழைப்பு என்று கூறிக்கொண்டு மதியாதார் வாசலில் மண்டியிட்டு ஏன் தான் தமிழன் மானத்தை இப்படி விலை கூறிவிற்கிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

அன்பு நண்பா,

"......தலை" என்னும் பெயர் கொண்ட தாளொன்று நம் தமிழரசு இயக்கம் மீது தூற்றல்களை தொடுத்து வருகிறதே; நம் இயக்கத்தைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் எழுதி காழ்ப்புணர் வைக்கொட்டி வருகிறதே; இந்த ஏட்டின் ஏசல்களுக்கு நீ ஏனண்ணு பதில் கொடுத்திடவில்லை; எதிரிகளின் இடுப்பொடித்திடும் உன்பேனு ஏனண்ணு '...தலைக்கு' தக்க சாட்டையடி தந்திடவில்லை; எனக்கேட்டு தம்பிகள் சிலர் எழுதியிருக்கின்றனர்;

நண்பா, நம்மை—நமது இயக்கத்தை—நமது தலைவர்களைத் தூற்றிடுவதற்கென்றே இந்நாட்டில் சில ஏடுகள் நடத்தப்படுகின்றன என்பதை நீ அறிவாய்! நம்மைத் தூற்ருவிட்டால் அந்த ஏடுகளுக்கு எழுதிட பொருளே வேறு இல்லையென்ற நிலை! நமது இயக்கத்தை பற்றி இல்லாததும் பொல்லாததும் எழுதியே தமது பக்கங்களை நிரப்பிடவேண்டிய நிலை அந்த ஏடுகளுக்கு! தமிழரசு இயக்கத்தை திட்டுவதையேதமது பிறவிப்பெரும் பயனகக்கொண்டவை அந்த ஏடுகள்! அத்தகைய ஏடுகளிலே ஒன்றுதான் நமது இயக்கத்தோழர்கள் சிலர் கண்டு ஆத்திரமடைந்திடும் '...தலை' ஏடும்!

நம்மைத்திட்டித் தீர்த்து வரும் இத்தகைய ஏடுகளுக்கு பதிலளித்துக் கொண்டு நமது நேரத்தை வீணுக்கிக்கொண்டிருப்பதை விட, நமது இயக்கத்துக்கும், இனத்துக்கும் மொழிக்கும் நாம் ஆற்றிடவேண்டிய பணிகளை எண்ணிப்பார்த்து அவற்றில் ஈடுபடுவதே இன்று நம் முன்னுலுள்ள பெருங்கடமை என்பதனை ஆத்திரப்படும் அன்புத் தோழர்கள் சிந்தனையில் கொண்டிடவேண்டும்!

**நம்மைத் திட்டித் திட்டியே அழித்து விடலாம் என்று கருதி எத்தனை பேர் இது வரை புறப்பட்டார்கள்; அவர்கள் எல்லாம் இன்று என்ன ஆனுர்கள்; என்பதனை ஒரு கணம் எண்ணிப் பார்த்திடின் இன்று சிலர் நம்மைத் திட்டுவதைக் கண்டு சிரிப்பதைத் தவிர சீறுவதற்கு யாது காரணமுமில்லை!**

நமது தமிழரசு இயக்கத்தை அழித்து ஒழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம் என்று புறப்பட்ட 'வீராதி வீரர்கள்' 'சூராதி சூரர்கள்' தாம் எத்தனை பேர்? பொன்னம்பலம் புறப்பட்டார்; இன்று போன இடம் தெரியவில்லை! சுந்தரர் புறப்பட்டார்; மக்களால் ஒரு தடவையல்ல—பல தடவைகள் தூக்கியெறியப்பட்டார்! அல்பிறட் துரையப்பா புறப்பட்டார்; அம்புபட்ட மான்போல் சுருண்டு வீழ்ந்தார்! ஆர். ஜி. சேனநாயகா புறப்பட்டார்; அதோகதியானுர்! நல்லையாக்களும் எதிர்மன்ன சிங்கங்களும் புறப்பட்டனர்; வாலொட்ட நறுக்கப்பட்டனர்! என். எம். பெரேராவும், பீட்டர் கெனமனும் வி. பொன்னம்பலமும் தமிழரசுக்கட்சியை ஒரே நொடியில் அழித்துவிடுகிருேம் என்று வீராவேசம் பேசினர்; அவர்களது விலாவையொடித்தனர் தமிழ் மக்கள் தங்கள் தேர்தல் தீர்ப்பின்மூலம்! கடைசியாக தமிழரசுக் கட்சியை ஒழிக்க சபதமேற்பட்டு புறப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை நவரத்தினமும் தினபதியாரும்; இருவருமே முக்காடு போட்டபடி மூலையிலே ஒதுங்கிக் கிடக்கின்றனர் இன்று!

இதுமட்டுமா நண்பா, நமது இயக்கத் தோழர்கள் பலரை மாற்ருர் அடித்து நொறுக்கினர்; வெட்டிக் கொன்றனர்; சுட்டுப் பொசுக்கினர்; நமது கொக்குவில் அருணுசலத்தை ஒரு தடவை அடித்து இறந்துவிட்டாரோ என்ற பயத்தில் சுடலைக்குள் கொண்டு சென்று போட்டு சென்றனர்! இப்படி வன்முறையை நம்மீது ஏவிவிட்டும் நமது இயக்கத்தை அழித்துவிட முடியவில்லை மாற்ருரால்!

மாற்ருரின் வன்முறைகளை மட்டுமா நாம் தாங்கி வளர்ந்தோம்? அரசாங்கத்தின் கொடூர அடக்கு முறைகளையும், பொலீஸ் தடியடிகளையும், சிறைச்சாலை சித்திரவதைகளையும் பலதடவைகளில் சந்தித்ததன்ருே நமது இயக்கம்! இன்றுகூட நம் இயக்கத் தோழர்கள் பலர், நமது தமிழரசு இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஆட்சியாளர்களாலும், அவர்களது எடுபிடிகளாலும் எத்தனையோ தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆட்படுத்தப்பட்டும் அதை யெல்லாம் தாங்கி வருகிருர்கள்!

**இப்படிப்பட்ட நமது இயக்கத்தை—தமிழ் மக்களின் உள்ளங்களிலெல்லாம் வேரோடி ஆழப்பதிந்துவிட்டதமிழரசுக் கட்சியை வசைமொழிகளாலும், கண்டன** மாரியாலும் அழித்துவிடலாமென இன்னும் சிலர் கனவு காண்கிருர்கள் என்ருல்—அவர்களுக்குப்பதில் சொல்லிக்கொண்டிருப்பதைவிட பொறுப்பான வேலைகள் நமக்கு காத்திருக்கின்றன!

நமது இயக்கத்தவர் யாருடைய முதுகிலும் புண் கிடையாது! தமிழ் மக்களுக்கும் தமிழரசு இயக்கத்துக்குமிடையே பிணைப்பும் உறவும் நெருக்கமாக இருக்கிறது; மக்களுக்கும் நமக்குமிடையே எந்தவித ஒளிவும் மறைவும் கிடையாது; சுருங்கச் சொன்ருல் தமிழரசுக்கட்சி வேறு, தமிழ் மக்கள் வேறு என்ற நிலை இந்நாட்டில் கிடையாது! தமிழ் மக்களுக்கு தமிழரசுக்கட்சி பற்றி— கட்சியின் அந்தரங்க சுத்தியைப்பற்றி—கட்சியின் தியாக வரலாறுபற்றி—நன்கு தெரியும். அப்படித்தெரிந்தபடியாலேயே கடந்த 15 ஆண்டுகளாக 1956ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் தமிழரசுக்கட்சியையே தமது பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகத் தெரிவு செய்து தமது எதிர்காலத்தையே தமிழரசுக்கட்சியின் கையில் ஒப்படைத்தும் வருகிருர்கள்!

இந்நிலையில் மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள்—மூக்கறுக்கப்பட்டவர்கள்—பொருமை பொச்சரிப்பு பிடித்தவர்கள்—தமிழரசுக் கட்சியைப் பற்றி மக்கள் மன்றத்திலே தவருன கருத்தை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்ட பொய்ப் பிரசாரத்திலே இறங்கியிருக்கிருர்கள் என்ருல் அதற்கு நாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கவேண்டியதில்லை. ஏனெனில் மக்களுக்கு அரசியலறிவு நிரம்ப உண்டு இன்று!

வல்வையில் ஏற்பட்ட ஒற்றுமையைத் தமிழரசுக்கட்சி ஏதோ குலைத்துவிட்டதுபோல ஒரு கட்டுக் கதை கட்டி விடப்பட்டு வருகிறது; கவனித்திருப்பாய் நண்பா! இது எவ்வளவு அபாண்டமான பொய்; என்பது மக்களுக்கு இப்போது தெரியாமலா இருந்திடும்?

வல்வை ஒற்றுமை மாநாடு நடத்தப்பட்டது ஏன்; அதை நடத்த முன்னின்றுழைத்தவர் யாவர்; அது எவ்வளவு தூரம் வெற்றி பெற்றது என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் தெரிந்திடின், தமிழரசுக்கட்சி மீது பழி சுமத்துவோர் நிலை மக்களுக்குப் புரிந்துவிடுமன்ருே!

## தூற்றுவார் தூற்றட்டும்! தொடருவோம் நம் பணி!

அரசியல் நிர்ணய சபையில் தமிழினத்தின் குறைந்த பட்சக் கோரிக்கைகள் ஒரே குரலில் வலியுறுத்தப்பட வேண்டும்; இதற்கு அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்திடும் இரண்டு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கிடையே பொதுவானதோர் உடன்பாடு கண்டிட வேண்டும்; என்கின்ற நோக்குடன் தான் வல்வை மாநாடு கூட்டப்பட்டது; கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் முற்ருக நிராகரிக்கப்பட்ட நவரத்தினத்தின் சுயாட்சிக் கழகமும் சுந்தரலிங்கத்தின் தனி நபர் கட்சியும் கூட இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டன. இந்த ஒற்றுமை மாநாட்டினை நடத்துவதிலே முழு ஒத்துழைப்பும், ஆதரவும் நல்கியது தமிழரசுக்கட்சி என்பது இம்மாநாட்டைக் கூட்டிய வல்வை அன்பர்களுககுத் தெரிந்திருக்கும்!

இந்த ஒற்றுமை மாநாட்டிலே தமிழ் மக்களின் சார்பில் அரசியல் நிர்ணய சபையில் வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்பது திருத்தங்கள்—தமிழினம் இந்நாட்டில் ஓரளவு உரிமையுடன் தமிழினமாக வாழக் கூடிய ஒன்பது முக்கிய பாதுகாப்புக்கள்—ஏற்றுக் கொள்ளப்பட்டன! இந்த ஒன்பது அம்சக் கோரிக்கையே தமிழினத்தின் குறைந்த பட்சக் கோரிக்கைகள் என்றும் முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்தானது!

உண்மையில் நண்பா, இந்த ஒற்றுமை மாநாட்டில் அனைத்துத் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளாலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒன்பது அம்சத் திருத்தங்களும், ஏற்கெனவே தமிழினத்தின் சார்பில் தமிழரசுக் கட்சியினுல் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களே. தமிழரசுக்கட்சியின் திருத்தங்களைத் தான் ஏனைய மூன்று தமிழ்க்கட்சிகளும் அப்படியே ஏற்றுக்கொண்டு, வல்வை ஒப்பந்தம் உருவாயிற்று!

வல்வை உடன்பாடு உருவான மறுநாளே அதற்கு வேட்டுவைக்கும் முயற்சி நடைபெற்றது! அரசியல் நிர்ணயசபையில் அங்கம் வகித்திடும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் மூன்று பா. உ.க்களும், உடன்பாட்டுக்கு தாம் கட்டுப் படப்போவதில்லையென்றும், தமது சார்பில் வேறுபட்ட திருத்தங்களைக் கொண்டுவரப் போவதாகவும் பகிரங்கமாகக் கூறினர்கள். தமிழ் காங்கிரஸ் பா.உ.க்களின் இந்த விபரீதப் போக்கினை—ஒற்றுமையை உடைத்தெறியும் ஐந்தாம்படை வேலையை — தடுத்து நிறுத்திட தட்டிக் கேட்டிட—தமிழ் காங்கிரஸ் தலைமைப் பீடத்துக்கு ஆற்றலில்லாமலோ அல்லது வேண்டுமென்ருே—வக்கற்று இருந்துவிட்டது!

வல்வைத் தீர்மானங்களை ஆதரித்திடமாட்டோம்; தனியே வேறு திருத்தங்கள் கொண்டு வரப் போகிருேம் என்று கூறிவந்த தமிழ் காங்கிரஸ் பா. உ.க்கள், ஈற்றில் எல்லாவற்றையுமே கைவிட்டு, ஆளுங்கட்சியின் அடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி, கொல்வினின் அடிப்படைத் தீர்மானங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அம்மாவுக்கு நல்ல பிள்ளைகளாகி, தமிழினத்தின் முதுகில் குத்தி வருகிருர்கள்!

**ஆக, எந்த நோக்கத்துடன் வல்வை ஒப்பந்தம் உருவானதோ அந்த நோக்கத்தை பாழடித்துவிட்டனர் தமிழ் காங்கிரஸ் பா. உ. க்கள்! ஆம் அரசியல் நிர்ணய சபையில் தமிழினத்தின் குரல் ஒரே குரலாக ஒலித்திட வேண்டுமென்பதே வல்வை ஒற்றுமை மாநாட்டைக் கூட்டியவர்களின் ஒரே நோக்கம்; ஒற்றுமைக்கு கட்டுப்பட மறுத்து அந்த நோக்கத்தில் மண்ணை வாரிப் போட்டு விட்டனர் தமிழ் காங்கிரஸ் பா. உ. க்கள்! தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் தாம் அரசியல் நிர்ணயசபையில் வல்வை மாநாட்டுத் தீர்மானங்களை கொண்டு வந்து அவற்றின் முக்கியத்துவத்தை குறித்து உரை நிகழ்த்தியிருக்கிருர்கள் என்பது அ. நி. சபையின் நடவடிக்கைகளை கவனித்து வருபவர்களுக்கு நன்கு தெரிந்திடும்!**

**தமிழ்மொழி சம்பந்தப்பட்ட நமது திருத்தங்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளப் படாவிடின், தமிழரசுக்கட்சியினர் அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்து வெளியேறவும் தயாராக இருக்கிருர்கள்!**

இந்த நிலையில், தமிழரசுகட்சிதான் வல்வை ஒப்பந்தத்தை மீறிவிட்டதுபோல நாடகம் ஆடி, மக்கள் மன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி, தமிழரசுக் கட்சிமீது வெறுப்பை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கிருர்கள் என்ருல் அதில் ஏமாந்துபோவதற்கு இந்நாட்டுத்தமிழ் மக்கள் அரசியல் தெரியாதவர்களல்லர்!

எனவே நண்பா, நம்மைத் தூற்றுவோர் தூற்றிக் கொண்டே இருக்கட்டும்! நாம் நம் மனச்சாட்சிப்படி இனத்துக்கும் மொழிக்கும் ஆற்றவேண்டிய பணியினைத் தொடருவோம்! நமது இயக்கத்தை நம்பி—நமது தமிழரசு இலட்சியத்திலே நம்பிக்கை வைத்து—இலட்சோப லட்சம் தமிழர்கள் நமக்குப்பின்னுல் அணிவகுத்து நிற்கின்றனர். அந்தத் தமிழ் மக்களை விடுதலைப்பாதையிலே அழைத்துச்சென்றிட வேண்டியதே நமது பெரும் பொறுப்பாகும்! தமிழ்மொழியின் வாழ்வே எங்கள் மூச்சாகும்!

**நம்முடைய தமிழரசு பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து நாளை வெளியேறிவிட்டால்; தமிழ்மொழி காத்திட—தமிழினம் உரிமைபெற்றிட—ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்படுமானுல்—மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று பண்ணிசைத்தபடி சிறைச்சாலைக்கு செல்பவர்கள்—சித்திரவதைக்கு ஆளாகுபவர்கள்—தமிழரசு வீரர்கள் தாம்; இன்று நம்மை நரம்பில்லா நாக்கால் தூற்றிக்கொண்டிருப்பவர்களல்லர்; என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரிந்த ஓர் உண்மையாகும்!**

எனவே போற்றுவோர் போற்றட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும்; தொடருவோம் நம் தமிழ் காக்கும் பணியை!

உன் நண்பன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் தபால் நிலயம் திறக்கப்படுவதற்கு காரணகர்த்தாக்கள் யார்?

## திறப்பு விழாவில் தங்கத்துரை பேச்சு!

சென்ற 29-5-71 ல் மூதூர் புதிய தபால் நிலயத் திறப்பு விழா நிகழ்ச்சி இடம் பெற்றது. இவ்விழாவில் மந்திரி குமாரசூரியர் கலந்துகொண்டு தபால் நிலயத்தினை திறக்கவிருந்தார். இறுதியில் அவர் வராததன் மர்மம் யாதோ? இதுபற்றி மூதூர் மக்கள் பலவாறாக கருத்துத் தெரிவித்துக் கொண்டனர்.

புதிய தபால் நிலயம் 29-5-71 காலை 9-15 மணியளவில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இவ்விழாவுக்கு தலைமை வகித்த உதவி அமைச்சர் ஜனாப். ஏ.எல்.ஏ. அப்துல் மஜீத் பேசும்போது:-1963ம் ஆண்டு மூதூருக்கு தபாற் கந்தோர் தேவையெனக்கருதி அதற்கான நிலமாக இந்த இடத்தை நான் அன்றே சிபார்சு செய்திருந்தேன். அதனால் இன்று இத்தபாற் கந்தோர் மூதூர் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என்றவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், இன்றைய இக்கட்டான அரசியல் நிலமையில் நம் நாட்டிற்கும் அரசுக்கும் கடமை செய்ய வேண்டும். கடமை செய்யாது உரிமை கோருவது ராஜதுரோகம் ஆகும் எனப் பேசி முடித்தார்.

இவரைத் தொடர்ந்து மூதூர் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணித் தலைவருமான திரு. அ. தங்கத்துரை அவர்கள் பேசுகையில்:—



இன்று இந்த விழாவில் பங்கு பற்றுவேன் என்று நான் நினைக்கவேயில்லை. ஆனால் எனது தொகுதி மக்களின் வேண்டுகோளை ஏற்று இவ்விழாவில் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இத்தபால் நிலயம் மூதூர் தொகுதிக்கு கிடைத்திருக்கிறதென்றால் அது எத்தகைய மகிழ்ச்சிக்குரியது.

இதற்கு முன்பு இருந்த தபால் நிலயத்தில் மழைகாலங்களில் வேலை செய்ய முடியாதவொரு நிலமை இருந்ததை நான் அறிவேன். இங்கிருந்த கடமையாற்றிய தபாலதிபர் திரு. குமாரசாமி அவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் சின்னமே இத்தபால் நிலயம்; எனவே நாம் அவருக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டவராவோம்.

அதே வேளையில் எமது கட்சி சார்பில் 1965ல் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜனாப். எம். ஈ. எச். முகம்மதலி அவர்களின் முயற்சியினையும் நாம் பாராட்டவேண்டும். 1967ம் ஆண்டு அன்னார் இப்புதிய தபால் நிலயத்திற்கென நிதி ஒதுக்கிக் கொடுத்துள்ளார். நாங்கள் இத்திறப்புவிழா வைபவத்தில் கலந்து கொண்ட போதிலும் இத்திறப்பு விழாக் குழுவினர் திரு. குமாரசாமி அவர்களையும் ஜனாப். முகம்மதலி அவர்களையும் இத்திறப்பு விழாவிற்கு அழைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்களை மறந்ததன் யாது? அவர்கள் இருவரினது பெருமுயற்சியே இப்புதிய தபால் நிலயமாகும்.

தொடர்ந்து பேசுகையில் ''இந்நாட்டிலே உரிமைகளை கேட்கும் முன் கடமை செய்யவேண்டும் என்கிறார்கள். அப்படிச் செய்யாதவிடத்து அது ராஜதுரோகம் என்கின்றனர். நான் ஒன்று கூறுகின்றேன். இந்நாட்டிற்கு தமிழ் மக்கள் தங்கள் கடமையை உயிரிலும் மேலாகத்தான் செய்து வந்துள்ளார்கள். இந்நாட்டின் மலைநாட்டுப் பகுதிகளை செல்வங் கொழிக்கும் பூமியாக்கி தமது கடமையைச் செய்தது யார்? தமிழ் மக்கள் தான். அப்படி இந்நாட்டிற்கும் அரசினர்க்கும் கடமை செய்தவர்கள் தங்கள் உரிமை கேட்டுப்போராடுவது ராஜதுரோகமா?

## வீர வங்காளம்

— த. அமரசிங்கம் —

வங்காள தேசம் தன்னை
வாழ்விலே தோற்றுவித்த
வங்காளத் தந்தை ரஹ்மான்
வழி வழியாக வாழ்க
எங்கள் தம் தமிழர் அந்த
எழில் மகனுரைக் கண்டு
பொங்குரூர் பூரிக்கின்றார்
பூச்சரம் அணிகின்றாரே.

விடுதலைப் போராட்டத்தை
வெறியுடன் நடாத்தி வங்க
அடிமையை உடைத்தெறிந்த
அண்ணல் நீ நீடு வாழ்க
கொடு முடியாளர் ஏவற்
படையெலாம் அடக்கி-அங்கே
முடியுடன் ''முஜிபுர்'' நின்று
முறுவல் செய்கின்றான் பாரீர்!
வீர வங்காளம் விடுதலையடைந்தது
தீரர் திரண்டனர் திகைத்தது அகிலம்
சினப்புலியின் சிஷ்யர் பணிந்தார்
சீறிய ரஹ்மான் முடிதனை யணிந்தார்

# எம். சி. சுப்பிரமணியம் சிறுபான்மைத் தமிழர்களின் உண்மையான பிரதிநிதியா?

1970ம் ஆண்டு வைகாசித் திங்கள் 27ம் நாள் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மக்கள் அரசாங்கம் அமோக வெற்றியடைந்ததையடுத்து அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் தலைவியாகிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அகில இலங்கை சிறுபான்மைத் தமிழரின் பிரதிநிதியாக (நியமன அங்கத்தவர்) திரு. எம். சி. சுப்பிரமணியத்தை தெரிவு செய்தார். இதையறிந்த எல்லா சிறுபான்மைத் தமிழர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் தாண்டவமாடியது.

சோசலிச அமைப்பின் கீழ் தாங்கள் எல்லோரும் இது வரை காலம் இருந்து வந்த நிலைமை மாறி எல்லாத் துறைகளிலும் பொருளாதாரம், கல்வி ஆகியவற்றிலும் முன்னேற்றம் அடைவோம் என மனப்பால் குடித்தனர். மக்கள் அரசாங்கத்தினை ஆதரித்து யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் எம்.சி. சுப்பிரமணியம் தங்களுக்கு விடிவு காலம் வந்துவிட்டது; சோசலிச அரசாங்கத்தின் கீழ் கைலஞ்சம் போன்றவற்றைக் கட்டாயமாக ஒழிப்போம் என ஆணித்தரமாக அடித்துக் கூறினார். அந்தோபரிதாபம் அம் மக்களின் எண்ணங்கள் எல்லாம் பழுக்கும் பழுக்கும் என எதிர்பார்த்து பழமாகிய எம்.சியை நம்பி ஏமாந்து இலவு காத்த கிளி போலானார்கள். காரணம் இந் நியமன எம். பி (திரு. சுப்பிரமணியம்) தனக்கும், இனத்தவர்களுக்கும், தன்னுடன் சேர்ந்த உயர் ஜாதியினருக்கும் மட்டுமே பிரதிநிதியாக கடமையாற்றிவருகிறார்.

உண்மையில் சில இடமாற்றங்களைப் பொறுத்தவரை சிறுபான்மையோருக்கு உதவி செய்துள்ளார். ஆனால் சிறுபான்மையோரின் பொருளாதாரப் பிரச்சினையில் ஒன்றான பட்டதாரி ஆசிரிய நியமனத்தை நோக்கினால் மக்கள் அரசாங்கம் அமைக்கப் பட்ட பின்பு யாழ் முற்றவெளிமைதானத்தில் கூறியதற்கு எதிர் மாறாக நடந்துள்ளார்.

பட்டதாரி ஆசிரிய நியமனத்தை எடுத்துக் கொண்டால் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த பட்டதாரிகள் பல காலம் கஷ்டப்பட்டு கடன்பட்டு படித்து சிறு தொழிலும் இல்லாமல் மிகவும் தொல்லைப் பட்டு வந்துள்ளார்கள். வருகிறார்கள்.

எம்.சி.யின் சிபார்சின் மூலம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனம் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. தான் தொகுதியடிப்படையில் சிறப்புப்பட்டம் பெற்றோர், கூடிய காலமாக படித்து விட்டு இருப்போருக்குத்தான் முதலாவதாக சிபாரிசுசெய்து கட்டாயமாக நியமனம் கிடைக்கச் செய்வேன் என எல்லோரையும் மனப்பால் குடிக்கச் செய்தார். ஆனால் இறுதியில் சாதாரணப்பட்டம் பெற்ற கடைசி வருடம் சித்தி எய்தியவருக்கே சிபார்சுசெய்தார். அதுவும் தனதுமகன், மகனுடன் படித்தோர், இனத்தவர் தன்னுடன் தனது மகனுடன் நெருங்கிய உயர் ஜாதியினருக்குமே சிபார்சுசெய்தார் என்று கூறப்படுகிறது. இதனால் பல வருடம் படித்து இருப்போரும், சிறப்புப் பட்டம் பெற்ற சிறுபான்மைத் தமிழ்ப்பட்டதாரிகள் ஏமாற்றப்பட்டனர்.

இதைப் பற்றி எல்லோரும் முறையிட்டபொழுது நான் என்ன செய்வது காகம் கல்லுப் பொறுக்குவது மாதிரி இடையிடையே எடுத்துவிட்டார்கள் என்று மழுப்பினார். இதில் ஒரு புதுமை அக்காகத்திற்கு இவர் எம். பி. யின் மகன், இவர் அவருடன் சேர்ந்தவர், படித்தவர் என்று தெரிந்து ஒரே இனக்கற்களாகவே பொறுக்கி விட்டது. இதனால் சிறுபான்மைப் பட்டதாரி வட்டாரங்கள் எல்லாம் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் இனி நடைபெற இருக்கும் தராதரப் பத்திர மற்ற ஆசிரிய நியமனம், பஸ்கண்டக்டர் நியமனம் ஆகியவற்றிலும் இதுதான் [illegible] பட்டதாரி நியமனத்தில் கைலஞ்சமா? அல்லது எந்த லஞ்சம் என்று எல்லோரும் ஆத்திரமடைந்துள்ளனர். இனி நடைபெறப்போகும் நியமனத்தில் பருத்தித்துறை, ஆரியகுளப்பகுதி தான் இடம் பெறும் என எல்லோரும் வீறுகொண்டெழுந்துள்ளனர்.

இவரை எதிர்த்து நேரிடையாக பல துண்டுப் பிரசுரங்கள் சிறுபான்மைத் தமிழரால் வீட்டுக்கு வீடு விநியோகிக்கப் பட்டன. பொதுமேடை அமைக்கிறோம் வாதிடவரலாம் என்றெல்லாம் துண்டுப்பிரசுரங்கள் வெளிவந்தன. இவற்றுக்கெல்லாம் பதில் இறுக்காமல் ஆமைதலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு இருப்பது போல் இருப்பது இவை எல்லாம் உண்மை என்று நிரூபிக்கிறது. எனவே உண்மையில் திரு. எம். சி. சுப்பிரமணியம் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழரின் பிரதிநிதியாக செயலாற்றவில்லை என்பது புலனாகிறது.

இவரா மக்கள் அரசாங்கத்தின் பிரதிநிதி?

இவரா சிறுபான்மைத் தமிழரின் பிரதிநிதி?

இவரா சோஷலிசவாதி?

—க. தியாகலிங்கம்
பருத்தித்துறை வீதி
யாழ்ப்பரணம்

## மக்கள் குரல்

## காந்தி ஒரு தமிழாசிரியர்

'டால்ஸ்டாய் பண்ணையில் இலக்கியப் பயிற்சிக்கு அதிக பட்சம் மூன்று பாட நேரங்களை ஒதுக்கினோம்; ஹிந்தி, தமிழ், குஜராத்தி, உருது மொழிகள் போதிக்கப் பட்டன. சிறுவர்களின் மொழியிலேயே அவர்களுக்குப் பாடங்களைப் போதித்தோம்; ஆங்கிலமும் கற்பித்து வந்தோம். குஜராத்தி ஹிந்துக் குழந்தைகளுக்குக் கொஞ்சமாவது சமஸ்கிருதமும் சொல்லிக் கொடுக்க வேண்டியது அவசியமாயிற்று; எல்லாக் குழந்தைகளுக்குமே சரித்திரம், பூகோளம், கணக்கு இவைகளில் ஆரம்பப் பாடங்களையாவது போதிக்க வேண்டியிருந்தது.'

'டால்ஸ்டாய் பண்ணையில் தமிழும் உருதும் சொல்லிக் கொடுப்பதை நான் ஏற்றுக்கொண்டேன். எனக்குத் தெரிந்த சொற்பமான தமிழ் என் கப்பல் பிரயாண காலத்திலும் சிறையிலும் கற்றுக் கொண்டதாகும். போப் என்பவர் எழுதிய சிறந்த தமிழ்ப் பாடப் புத்தகத்தைத் தவிர வேறொன்றையும் நான் படித்ததில்லை. ஒரு கப்பல் பிரயாணத்தில் நான் கற்றுக்கொண்டதே உருது எழுத்துக்களைக் குறித்து எனக்கு இருந்த ஞானம். முஸ்லிம் நண்பர்களுடன் பழகியதால் நான் தெரிந்து கொண்ட சாதாரணமான பார்ஸிய அரபுச் சொற்களே உருதுவில் எனக்குத் தெரிந்ததெல்லாம் ஆகும். உயர்தரப் பள்ளியில் நான் படித்ததற்கு மேல் எனக்கு சமஸ்கிருதமும் தெரியாது. பள்ளிக் கூடத்தில் படித்துக் கற்றுக்கொண்டதற்கு அதிகமானது மல்ல, என் குஜராத்தி மொழி ஞானம்.

'இத்தகைய மூலதனத்தைக் கொண்டே நான் சமாளித்துக்கொள்ள வேண்டியதாயிற்று, இலக்கியத் தகுதியில் என் சகாக்கள் என்னைவிட அதிக வறுமையில் இருந்தனர். ஆனால், என் நாட்டு மொழிகளில் எனக்கு இருந்த ஆசை, உபாத்தியாயராக இருக்க முடியும் என்பதில் எனக்கு இருந்த நம்பிக்கை, என் மாணவர்களின் அறியாமை, அதைவிட அவர்களுடைய தாராள மனப்பான்மை ஆகியவைகளெல்லாம் சேர்ந்து என் வேலையை எளிதாக்கின.'

-மாகாத்மா காந்தி 'சுயசரிதை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆ. சிவனேஸ்வரன்,
வத்தளை.

கே: அடுத்த பொதுத் தேர்தலில் த: காங்கிரஸ் எம் பிக்களை மக்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்வார்களா?

ப: தமிழ் மக்கள் கொள்கைக்காக வாக்களிக்கும் அரசியல் பண்பாட்டை வளர்த்துக்கொள்ளாதவரை இவர்கள் போனாலும் வேறு புல்லுருவிகள் தோன்றத்தான் செய்வார்கள்!

ஃ

ஆ. கலைராணி,
பண்ணாகம்.

கே: இன்று தமிழினத்தின் தளபதி அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் இருந்தால்...?

ப: தியாகராசா எங்காவது காவடி எடுத்துக் கொண்டு திரிவார்!

ஃ

ஆ. நிர்மலன்,
பண்ணாகம்.

கே: முன்னாள் வட்டுக்கோட்டை பா.உ. அமிர்தலிங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு திட்டங்கள் தீட்டி வருகிறார்!

ஃ

க. சண்முகநாதன்,
வேலணை மேற்கு.

கே: புனர்வாழ்வு நிதிக்காக இலங்கைக்கு நாடோடி மன்னனை இலவசமாகவழங்கு தற்கு மக்கள் திலகம் எம். ஜி.ஆர். முன்வந்திருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டுமென்ற பழமொழியை மக்கள் திலகம் மறந்திருக்கமாட்டார் என்று நம்புகின்றேன்!

ஃ

பொ: கலைச்செல்வி,
ஏழாலை.

கே: தமிழ் நாட்டில் மது விலக்கை ரத்து செய்வதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

ப: இப்பிரச்சினையில் என் ஆதரவோ எதிர்ப்போ எது விதத்திலும் பயனளிக்காது. தமிழக மக்களும் தமிழக அரசும் தான் நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்!

கே: தியாகராசா, அருளம்பலம், ஆனந்தசங்கரி ஆகியோர் இன்னும் காங்கிரசில்தான் இருக்கிறார்களா?

ப: அவர்களை காங்கிரசிலிருந்து வெளியேற்றிவிட்டதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம் இன்னும் அறிவிக்கவில்லையே!

ஃ

நா. க. குமாரதாசன்,
நீர்கொழும்பு.

கே: நீங்கள் யாரைக் கண்டு பயப்படுகிறீர்கள்?

ப: நண்பர்களைப்போல நடித்துக்கொண்டே முதுகில் குத்துபவர்களைக்கண்டு!

கே: யாரை நேசிக்கிறீர்கள்?

ப: என்னைத்திட்டுகிறவர்களை!

கே: குமாரசூரியர் பல்கலைக் கழகம் என்னாச்சு?

ப: குப்பைக்கூடைக்குள் கசக்கி வீசியாச்சு!

கே: குமாரசூரியர் இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு செய்த நன்மை என்ன?

ப: தமிழ் மக்களைக் கலப்புச் சாதி யென்று இகழ்ந்ததன் மூலம் தூங்கிக்கிடந்த தமிழனைத் தட்டி யெழுப்பியது!

கே: இமோலுக்கு என்ன மந்திரிப் பதவி கொடுக்கலாம்?

ப: 'காக்காய்பிடி' மந்திரி பதவி!

கே: உலகிலே உள்ள சமயங்களில் சிறந்த சமயம் எது?

ப: மொழி, இன விடுதலைக்காகப் போராடும்சமயம்!

ஃ

கே: கருணாகரன்,
யாழ்ப்பாணம்.

கே: வட்டுக்கோட்டை தியாகராசாவுக்கு செனட்டர் பதவி கிடைத்திருந்தால்...?

ப: அவரது தமிழ்த் துரோகத்திற்கு இன்னும் நான்கே நான்கு மாதங்களில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும்!

கே: தமிழ் காங்கிரஸ் முக்காலிகள் அரசுடன் சேர்ந்ததால் தமிழ் மக்களுக்கு கிடைத்த நன்மை என்ன?

ப: தமிழ்த் துரோகிகள் மூவரை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது ஒரு பெரிய நன்மை அல்லவா?

கேள்வி பதில்
தணிக்கை

செ. புவனநாயகி,
நொச்சிமோட்டை.

கே: ஒரு மனிதனின் உண்மையான திறமையை எப்போது காணலாம்?

ப: பொறுப்பான பதவி அவனுக்கு கிடைக்கும் போது!

எஸ். கற்புக்கரசி,
நொச்சிமோட்டை.

கே: விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியுடன் ஆத்மீக வளர்ச்சியை இணைக்க முடியுமா?

ப: இணைக்க முடியாது! விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி மனித ஆற்றலின் அறிகுறி; ஆத்மீக வளர்ச்சி தெய்வீக ஆற்றலின் அறிகுறி!

ஃ

ரீ: சிவானந்தன்,
முல்லைத்தீவு.

கே: சுதந்திரன் பத்திரிகையில் 'அத்தான்' என்ற புனை பெயருடன் எழுதப்படும் கவிதைகள் பெண்களைத் தாக்கி வருகின்றனவே... இப்படியான கவிதைகளை சுதந்திரனில் வெளியிடலாமா?

ப: 'அத்தான்'கவிதைகள் எல்லாப் பெண்களையும் தாக்கவில்லை; தமிழ்ப் பண்பு மீறி, போலி நாகரிகத்தில் மூழ்கி, ஒழுக்கத்தை காற்றில் பறக்கவிடும் 'போலி' களைத்தான் சாடுகின்றன— அவர்களையும் திருத்த வேண்டும் என் நல்ல நோக்கத்துடன்!

ஃ

இ: பொ: ஜெயபாலன்,
தேவாலய வீதி,
சங்கானை.

கே: வங்காளிகள் தங்கள் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்துகிறார்கள். தமிழின விடுதலை இயக்கமாம் தமிழரசுக் கட்சி இதை உணருமா?

ப: ஒவ்வொரு இனமும் காலத்துக்காலம் சூழ்நிலையை அனுசரித்தே தமது விடுதலைப் போராட்டங்களை நடத்திவருகின்றன. தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை அஹிம்சையில் நம்பிக்கை இழக்க வேண்டிய சூழ்நிலை எதுவும் இதுவரை எழவில்லை!

கே: தியாகராசா தன் வால்பிடிகளுக்கெல்லாம் வேலை கொடுத்துவிட்டாரா?

ப: அவர் இப்போது தனக்கு இன்னும் மந்தி(ரி) வேலை கிடைக்கவில்லையே என்றல்லவா அங்கலாய்க்கிறார்!

ஃ

மாலா,
மட்டுநகர்.

கே: இந்தியாவிலுள்ள இருபெருந் தலைவர்களான கர்ம வீரர் காமராசரும் கடமை வீரர் கருணாநிதியும் எப்போதாவது ஒன்று சேர்வார்களா?

ப: அரசியலில் நடக்க முடியாதது என்று எதையும் கூற முடியாது!

ஃ

வே: பரமகுரு,
திருகோணமலை.

கே: எங்கள் நா: உ: பா: நேமிநாதன் அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நல்லவர்; வல்லவர்; தமிழ் விடுதலை உணர்வு நிரம்பப் பெற்றவர்; திருகோணமலையை தமிழர் பிரதேசமாகக் காப்பாற்றி வைத்திருப்பவர்; இன்னும் கொஞ்சம் சுறுசுறுப்புடன் இவர் செயற்படவேண்டுமென்று திருகோணமலை இளைஞர்கள் எதிர்பார்க்கிறார்கள்!

ஃ

தெ. பாலச்சந்திரன்,
காங்கேசன்துறை.

கே: தமிழ் நாடு அரசு சென்னையில் 65 மாடிக் கட்டடம் கட்டியபின் அதற்கு என்ன பெயர் வைக்கும்?

ப: நிச்சயம் தூய தமிழ் பெயர் ஒன்று வைக்கும் என்று நம்பலாம்!

கே: தபாற்கந்தோர் அலுவலக திகதி முத்திரையில் தமிழ் இடம் பெறுகிறதா?

ப: இடம் பெறவில்லை! திகதி முத்திரையில் தமிழும் இடம்பெறவேண்டுமென தமிழரசுத் தலைவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் ஏற்க மறுத்துவிட்டது அரசு. உங்கள் தொகுதியில் போட்டியிட்டாரே ஆளுங்கட்சி வால்பிடி வி. பொன்னம்பலம், அவரிடம் கேளுங்கள்—திகதி முத்திரைகளில் தமிழ் ஏன் இடம் பெறவில்லையென்று!

## வேற்று மொழிகளில் திருக்குறள்!

திருக்குறளை......

1730-ஆம் ஆண்டு 'இலத்தின் மொழியில்' மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர்.

1803-ஆம் ஆண்டு செர்மன் மொழியில்' மொழி பெயர்த்தவர் ஏ. எஃப். காமரேச்.

1812-ஆம் ஆண்டு 'ஆங்கில மொழியில்' மொழி பெயர்த்தவர் எல்லீசர்.

1812-ஆம் ஆண்டு 'ஆங்கில மொழியில்' மொழி பெயர்த்தவர் கி: இ. கவர்:

1812-ஆம் ஆண்டு 'ஆங்கில மொழியில்' மொழி பெயர்த்தவர் டபிள்யூ. எச்: ட்ரூ.

1852-ஆம் ஆண்டு 'பிரெஞ்சு மொழியில்' மொழி பெயர்த்தவர் ஏரியல்:

1856-ஆம் ஆண்டு 'பிரெஞ்சு மொழியில்' மொழி பெயர்த்தவர் கிரால்.

1867-ஆம் ஆண்டு 'பிரெஞ்சு மொழியில்' மொழி பெயர்த்தவர் எம்: லெமரோச்.

1887-ஆம் ஆண்டு 'தெலுங்கு மொழியில்' மொழி பெயர்த்தவர் கனுப்பர்த்திவேங்கட்ட இராம வைத்தியநாதர்.

1896-ஆம் ஆண்டு 'ஆங்கில மொழியில்' மொழி பெயர்த்தவர் சி. யு. போப்பையர்.

1896-ஆம் ஆண்டு 'ஆங்கில மொழியில்' மொழி பெயர்த்தவர் திரு. வ. வே. சு. ஐயர்.

1915-ஆம் ஆண்டு 'மலையாள மொழியில்' மொழி பெயர்த்தவர் திவான் பகதூர் கோவிந்தப் பிள்ளை.

1922-ஆம் ஆண்டு 'வடமொழியில்' மொழி பெயர்த்தவர் திரு. அப்பாதீட்சதர்.

1924-ஆம் ஆண்டு 'இந்தியில்' மொழி பெயர்த்தவர் சோமானந்தராகத்.

1963-ஆம் ஆண்டு 'உருசிய மொழியில்' மொழி பெயர்த்தவர்கள்: கிலோசான்; யூரி கிளாசோவ்.

1969-ஆம் ஆண்டு 'உருசிய மொழியில்' மொழி பெயர்த்தவர் ஏ. இப்ராகிமோவ்.

மு: குணரத்தினம்,
வடக்கம்பராய்.

கே: வட்டுக்கோட்டை தியாகராசா எம். பி பதவியை விட்டு விலகி திரும்பவும்தான் சேர்ந்திருக்கும் ஸ்ரீ. ல. சு. கட்சியின் சார்பில் போட்டியிடத் தயாரா?

ப: அந்த அளவுக்கு அவரிடம் அரசியல் நேர்மை இருக்கிறதா?

கே: வட்டுக்கோட்டை சிங்கம் இல்லாத நாடாளுமன்றம் எதைப்போல் காட்சியளிக்கின்றது?

ப: முட்டுக்கட்டை இல்லாத தேர் போல!

கே: தனிப்பெருமையுடன் இருந்த வட்டுக்கோட்டை தொகுதி மக்களின் மானம் ஒரு சிலரின் சுய நலத்தால் தற்பொழுது தலைகீழாய் போயிற்றே இதற்கு என்ன செய்யலாம்?

ப: அடுத்த சந்தர்ப்பம் வரும்போது விட்டதவறைத் திருத்திக்கொள்வது தவிர இனிவேறு என்ன செய்யமுடியும்?

## தெய்வம் பொறுக்காது

(வி. த. குமாரசாமி)

தீமைகள் செய்யாதே—குழந்தாய்
தீயவை விட்டொதுக்கு!
பூமியி லுள்ளவரை—குழந்தாய்
புண்ணியஞ் செய்திடுவாய்.

வாய்மை தவறாதே—உனது
வாழ்வி னிலெப் பொழுதும்;
தூய்மை யுணர் வுடனே—துணைக்கு
தேவனைக் கும்பிடுவாய்!

பாவங்கள் செய்யாதே—உயிர்க்குப்
பாதகம் பண்ணாதே
பேதங்கள் கொள் ளாதே—பெரியோர்
போதனை தள் ளாதே!

வேதனை யான வற்றை—வெறுத்து
விட்டு ஒதுக்கி விடு
சோதனை செய்திடுவான்—இறைவன்
சோர்வு நீ கொள்ளாதே!

வேத நெறி பயிலு—குழந்தாய்
வேற்றுமை தள்ளி நட
வாதம புரியாதே—பெரியோர்
வாக்கின் படி [illegible]

நீதி வெளிச்ச மதில்—நிமிர்ந்து
நித்தமும் சென்றிடுவாய்!
ஊதியம் பார்க்காது—உனது
உண்மைக் கடமையைச் செய்!

தாயை மதித்து நட—உனது
தந்தையைப போற்றி மதி!
ஆயம் அழியு மட்டும்—மகனே
கண்ணியம காப்பா யடா!

சண்டைகள் செய்யாதே—சனத்தில்
சாதிகள் இல்லை யப்பா!
வண்ட மிழை வளர்க்க—உனது
வாழ்வில் உழைத் திடுவாய்!

அண்டிக் கெடுப்போரை—குழந்தாய்
அன்பால் திருத்த முயல்!
சண்டித் தனஞ் செய்தால்—அவரைச்
சங்கரன் பார்த் திடுவான்!

தப்புகள் செய்தால் நீ—மகனே
தெய்வம் பொறுக் காது!
இப்புவி வாழ்க்கை யெல்லாம்—பிறர்க்கு
[illegible]வையைச் செய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு சேதம்வராமல் தடுக்க

# ஆட்சிக்கொடி போர்க்கொடி இரண்டும்பிடிப்போம்!

## இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாற்றுக்கு சொத்தக்காரர் தி. மு. கழகத்தினர்!

## கலைஞர் கருணாநிதியின் வீரவுரை!

முன்பெல்லாம் சென்னை மாநகரத்தில் இருக்கின்ற தலைமைச் செயலகத்தில் மந்திரிகளைப் பார்ப்பதற்கு யாரோ சில மேட்டுக்குடி மக்கள் வருவார்கள். அதிகாரிகள் வருவார்கள்—ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர்கள் வருவார்கள்—சீமான்கள் வருவார்கள்— கோமான்கள் வருவார்கள் மிட்டாமிராசுகள்—குட்டிக் குபேரர்கள்—வட்டிக்கடை வேந்தர்கள் வருவார்கள்:

ஆனால் இன்றைக்கு அவர்களுடைய வருகை குறைந்து—சாதாரண மக்கள்—பாமர மக்கள்—அந்தப் பாமர மக்களின் பிரதிநிதிகள் இன்று கோட்டையைச் சுற்றுகின்ற காட்சியை நாம் காணுகின்றோம். அவர்கள் எங்களைச் சந்திக்கிற நேரத்தில் தங்கள் தொகுதிக்குச் செய்யவேண்டிய நூற்றுக்கணக்கான காரியங்களை எடுத்துச் சொல்கிறார்கள். நூற்றுக் கணக்கான காரியங்களைச் செய்து முடிக்கவேண்டும் என்கின்ற ஆசை உள்ளத்தில் எழுகிறது: ஆனால் அத்தனையும் செய்து முடிக்க முடியுமா என்ற ஏக்கம் உடனடியாக உருவாகிறது. செய்து முடிக்க முடியாதே என்கின்ற வருத்தம் ஏற்படுவதற்குக் காரணம் நிதிப்பற்றுக்குறை தான்; நிதிப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்றால் ஏதோ இந்த அரசு வருகின்ற நிதி வருவாய்களையெல்லாம் ஊதாரித்தனமாகச் செலவழித்து விட்டு உபயோகமான காரியங்களுக்குச் செலவழிக்கமுடியாமல் திண்டாடுகிறது என்று நீங்கள் யாரும் கருதமாட்டீர்கள்:

உங்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு 1967-ம் ஆண்டு உருவான பிறகு பல சோதனைக் கட்டங்களையெல்லாம் கடந்து வந்திருக்கிறது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அதிலே பயங்கரமான சோதனை—நினைத்தாலே இன்றைக்கும் நெஞ்சு குலுங்குகின்ற சோதனை நம் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களை இழந்த சோதனையாகும்.

அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் இருக்குமா? இந்த அரசு இருக்குமா என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன. எரிச்சல்காரர்கள் ஆட்சி நிலைக்காது என்று தவறான ஆவலை உள்ளத்திலே போட்டுக்கொண்டு அனுதினமும் இந்த ஆட்சியின் முடிவுகளை எதிர்பார்த்தவண்ணம் தாளேடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள். அனைத்திந்தியாவிலிருக்கின்ற அரசியல் மேதைகளெல்லாம் அண்ணாவுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் இருக்குமா? என்று ஏக்கத்தோடு சிலபேரும், ஆவலோடு சிலபேரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நம் நாட்டிலிருந்து அயைத்துலகம் சென்று பிழைத்துக் கொண்டிருக்கிற தமிழ்க்குடி மக்களெல்லாம் நாள்தோறும் தமிழகத்தின் செய்திகளை எதிர்பார்த்த வண்ணம் இருந்தார்கள்.

ஆனால் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்து போயிருக்குமேயானால் அண்ணா அண்ணாவாக இருந்திருக்க மாட்டார். அண்ணாவுக்குத் தலைவர் என்ற தகுதி பொருந்தியிருக்க முடியாது; உண்மையிலேயே ஒரு தலைவனுக்கு உள்ள தகுதி—தானைத் தலைவனுக்கு உள்ள தகுதி பின்னால் ஒரு படைவரிசை இருக்கிறது—தனக்குப் பின்னால் தான் விட்டுச் செல்லும் கொள்கைகளை நிறைவேற்ற அணியொன்று இருக்கிறது—தொண்டர்களுக்குத் தலைமை தாங்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்ற தகுதிதான் ஒரு தலைவனுக்கு உள்ள சரியான தகுதியாகும்.

### தலைவருக்குரிய தகுதியென்ன?

அந்தத் தலைவர் மறைந்தார்—அவருக்குப்பிறகு அந்தக் கட்சியே இல்லை; அந்தக் கட்சிக்கு ஆளே இல்லை என்றால் அது அந்த தலைவருக்குப் பெருமையாகாது. சில தலைவர்கள் கருதிக்கொண்டிருக்கலாம்—தனக்குப் பிறகு கட்சியில்லாமல் போனால்தான் பொதுமக்கள் பாராட்டுவார்கள்; ஆகா அவரல்லவா தலைவர்—அவருக்குப் பிறகு யாரும் அவரைப்போல் வரவே முடியவில்லையே—அந்தத் தலைவனுக்குப் பிறகு அந்த கட்சியே அழிந்து விட்டதே என்று பொதுமக்கள் பேசிக் கொள்வார்களேயானால் அது தலைவருக்கு உரிய சரியான தகுதியாகாது. தலைவனுக்கு உரிய தகுதி தனக்குப் பின்னால் பலபேர் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான். அந்தத் தகுதி பெற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா ஆவார்கள்:

அதனால் தான் 'அண்ணா அவர்களுக்குப் பிறகு அவரது கட்சி நிலைத்திருக்கிறது—அண்ணா அவர்களுக்குப் பிறகு அவர் உருவாக்கிய ஆட்சிக்கு மேலும் மேலும் ஆதரவு குவிந்த வண்ணம் இருக்கின்றது.

இது கண்டு மனம்பொறுதவர்கள் 1972-ம் ஆண்டு தேர்தல் வரட்டும். அந்தத் தேர்தலில் இந்த ஆட்சியை மாற்றிவிட்டு நாம் பொறுப்புக்கு வந்துவிடலாம். பிறகு நாம் வைத்தது தான் சட்டம் என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார்கள்:

நாம் அப்படியே ஆட்சி நமமை விட்டுப் போனாலும் கவலையில்லை என்றிருந்தோம். காரணம் மக்கள் பொறுப்பை முதன் முதலில் நம்மிடம் ஒப்படைத்த அந்தக் காலக் கட்டத்தில் நம்மால் ஆனவரை மக்களுக்குப் பணியாற்றினோம்—முடிந்தவரை தொண்டாற்றினோம்—மக்களுக்காகச் சங்கடங்களை ஏற்றுக் கொண்டோம்—ஆட்சிச்சக்கரத்தை ஏழை எழியவர்களுக்காகச் சுற்றிக் கொண்டிருந்தோம்: ஆட்சி இயந்திரம் இந்த நாட்டிலிருக்கிற பணக்காரர்களுக்கும்—படாடோபக்காரர்களுக்கும்—பளபளப்பானவர்களுக்கும் இல்லாமல் பஞ்சை பராரிகளுக்காக—பாட்டாளி மக்களுக்காக—சிற்றூரிலே வாழ்பவர்களுக்காக—குடிசையிலே வாழ்பவர்களுக்காகத் தான் இந்த இயந்திரம் நடைபெறும் என்கிற அளவில் நடாத்தினோம். ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு நீ தேவையில்லை போ என்று சொல்வார்களானால் நாம் ஆட்சியை மக்களுக்காக நடத்தியவரையிலே திருப்தி—மக்களுக்காக நாம் இதுவரை ஆற்றிய பணி மன நிம்மதியைத் தருகிறது என்கின்ற அளவிலே நாம் போய் விடக்கூடத் தயாராக இருந்தோம்.

### அறைகூவலை ஏற்றோம்

ஆனால் வாக்காளர்களாகிய நீங்கள்— தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்களாகிய நீங்கள் எங்களை விட்டுவிடத் தயாராக இல்லை. அதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். இதற்கிடையிலே 1971-ம் ஆண்டு இடைத் தேர்தலைச் சந்திக்கவேண்டிய கட்டம் உங்களுக்கும் எங்களுக்கும் ஏற்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலை இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் இந்திராகாந்தி பிரகடனப்படுத்தி விட்டார்.



எந்தக் குறிக்கோளை கோட்பாட்டை— இலட்சியத்தை முன்வைத்து மக்கள் மன்றத்திற்கு நான் வரப்போகிறேன் என்று கூறினார்களோ அதே கோட்பாட்டை கொள்கைகளைமுன்வைத்துதிராவிட முன்னேற்றக் கழகமும் மக்கள் மன்றத்திற்கு வந்தது. இன்னும் ஓராண்டுக் காலம் 138 பேரோடு பதவியில் நாங்கள் நீடித்திருக்க முடியும். ஆனாலும் ஓராண்டுக் காலத்தைப் பற்றிக் கவலைப் படாமல் என்ன ஆனாலும் பரவாயில்லை. 71-லேயே நாம் இவர்களைச் சந்தித்தாக வேண்டும் என்கின்ற கட்டத்திற்குத் துரத்தப்பட்டோம்.

எங்கு பார்த்தாலும் அது பொதுக்கூட்டமானாலும்—அவர்கள் எங்கே முழங்கினாலும் — காமராசரது கட்சியினர்—இராஜாஜியினுடைய சுதந்திராக் கட்சியினர் இவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓர் அறைகூவலை விட்டார்கள். 'சந்திப்போம்—72-ல் சந்திப்போம்' என்று முழங்கினார்கள்.

அதைப் பார்த்துப்பார்த்து எனக்குக் கொஞ்சம் பரிதாபம்கூட ஏற்பட்டது. 'ஐயோ பாவம் இன்னும் ஓராண்டுக் காலம் இன்னும் இவர்கள் வயிறுவலிக்க வலிக்க கத்திக் கொண்டே இருந்தால் உடம்பு [illegible]' என்கின்ற அனுதாப உணர்ச்சியோடு ஐயா [illegible] காங்கிரஸ் கட்சி நண்பர்களே—சுதந்திரக்கட்சித் தோழர்களே ஓராண்டுக் காலம்—72-ல் சந்திப்போம் என்று வாய் வலிக்க—வயிறு வலிக்க—விழி பிதுங்கக் கத்திக் கொண்டிருக்கத் தேவையில்லை: உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்; இப்போதே சந்திப்போம் வாருங்கள்' என்று முன்னேற்றக்கழகத்தின் சார்பில் நாம் அவர்களை அழைத்தோம்: அவர்களது அறைகூவலை ஏற்றோம்:

யாரை நம்பி அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டோம்? என்னை நம்பியா? நாவலரை — அன்பழகனை மாத்திரம் நம்பியா—மதியழகனை நம்பியா என். வி. நடராசனை நம்பியா—ப. உ. சண்முகத்தை நம்பியா—புலவர் கோவிந்தனை நம்பியா—சாதிக்பாட்சாவை நம்பியா கழகத்திலே இருக்கின்றமுன்னணி வீரர்களை நம்பியா? யாரை நம்பி அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டோமென்றால், என் எதிரே இருக்கின்ற பல்லாயிரக் கணக்காகக் கூடியிருக்கின்ற உங்களை நம்பித்தான் அந்த அறைகூவலைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டது.

இதை நான் இன்று மாத்திரம் அல்ல; தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்திற்கு இங்கு பேச வருகின்ற நேரத்தில் இதைச் சொல்லி விட்டுத்தான் போனேன். உங்களை நம்பித்தான் இந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஆகவே தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது என்று கூறிவிட்டுத்தான் சென்றேன்: அதைத்தான் இப்போதும் சொல்கின்றேன். ஆகவே தேர்தலுக்கு முன்பு ஒரு பேச்சு — தேர்தலுக்குப் பின்பு ஒரு பேச்சு திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கிடையாது.

யாரை மையமாக வைத்து இந்த ஆட்சி அமைந்தது? யாரை மையமாக வைத்து இந்தக் கட்சி உருவானது? இவைகளையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள்—பின்னடைந்த மக்கள்—சமுதாயத்தில் அழுத்தப் பட்டுக் கிடக்கும் மக்கள்—ஆகியோருடைய நல்வாழ்வுக்காக—அவர்கள் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்க வேண்டும் என்பதற்காகத் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை 1949-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமழைக்கிடையே தொடக்கி வைத்தார்கள்.

திராட முன்னேற்றக் கழகத்திற்கு முன்பு திராவிடர் கழகமாக நாம் உலவினோம். திராவிடர் கழகம் நீதிக்கட்சியாக நாட்டிலே நடைபெற்ற கட்சியாகும். நீதிக் கட்சியும் —சுயமரியாதை இயக்கமும் ஒன்றோடொன்று இணைந்து சமுதாயத்தைச் சீர்திருத்தம் செய்ய சுயமரியாதை இயக்கமும்—சமுதாயத்திற்கு ஏற்றமும் நல் ஒளியும் கிடைக்க நீதிக்கட்சியும்—இந்த இரண்டையும் தலைமையேற்று நடத்தும் பொறுப்பை பெரியார் அவர்களும்— பெரியாரின் தானைத் தளபதியாக பேரறிஞர் அண்ணா அவர்களும் இருந்த இந்த நாட்டிலே பின்தங்கிய மக்களுக்காக—தாழ்த்தப்பட்ட—அழுத்தப்பட்ட மக்களுக்காகப் பட்டிருக்கின்ற பாடு கொஞ்சநஞ்சமல்ல.

இன்றைக்கு அந்த அறுவடை முழுவதையும் பார்த்து அகமகிழ்ந்து— தமிழகம் செழிப்பதை — ஏழை சிரிப்பதை — பாட்டாளி முகத்திலே காணப்படுகின்ற பரவசத்தைக் கண்டுகளிக்கத் தக்க அளவுக்கு அண்ணன் நம்மோடு இல்லை என்றாலும் அந்த அண்ணனுக்குத் தலைவர் பெரியார் அவர்கள் நம்மோடு இருக்கின்றார். பெரியாரின் கொள்கைகள் முழுவதையும் நம்மால் நிறைவேற்ற முடியவில்லையென்றாலும், பெரியார் அவர்களால வளர்க்கப்பட்டவர்கள்—வாழ்த்தப்பட்டவர்கள் நாம் — பெரியார் அவர்கள் பள்ளியிலே பயின்றவர்கள் நாம்—உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராக நமக்கு அவர் இருந்திருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிக் கல்லூரியின் முதல்வராக இருந்து நம்மையெல்லாம் உருவாக்கினார்கள். நம் வரலாறு நீதிக் கட்சிக்காலம் தொடங்கி அதற்கு முன்பே சுயமரியாதை இயக்கம் தொடங்கி உள்ள வரலாறாகும். தமிழினம் விழிப்படைய— உணர்ச்சிபெற— தமிழ்மொழி காப்பாற்றப்பட — உருவான வரலாறாகும்.

இந்த வரலாற்றிலே எத்தனை பேர் தியாகத் தழும்புகளைப் பெற்றவர்கள்? எத்தனை பேர் கைகால்களை அறுத்துக் கொடுத்தவர்கள்? எத்தனை பேர் கண் இழந்து கபாலம் உடைந்த நேரத்திலும் வாழ்க தமிழ் வாழ்க தமிழ் என்று உச்சரிக்கஉச்சரிக்க உயிர்விட்டிருக்கிறார்கள்? எத்தனை தேக்குமரத் தேகம் படைத்த சிங்க இளைஞர்கள் தமிழுக்காக ஆவி கொடுத்திருக்கிறார்கள் —இந்த வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்தால் உருவாக்கப்பட்ட வரலாறு. இந்த வரலாறு இரத்தத்தால எழுதப்பட்ட வரலாறு இந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார். இந்த வரலாற்றேட்டில் நம்முடைய பெயர்களைப் பொறித்துக் கொண்டிருக்கிறோம் எனும் நேரத்தில் ஏற்படுகின்ற பெருமையும் புளகாங்கிதமும் யாருக்கும் ஏற்படமுடியாது.

### கழகத்தின் உயிரோட்டம்

வேறு எந்த மாநிலத்திலும் இந்தியாவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போல் ஒரு கட்சி செல்வாக்குப் பெற்ற கட்சியாக வளர்ந்திருக்க வில்லை. பல மாநிலங்களில் மாநில அளவில் கட்சிகள் வளரும் என்று எதிர்பார்க்கிறேன். மாநில அளவிலேதான் இனி கட்சிகளுக்குச் செல்வாக்கு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு வீண்போகவில்லை. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒரு மாநிலக் கட்சி இன்றைக்குத் தமிழ் நாட்டிலே இருக்கிறதென்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

அந்தக் கழகத்தின் உயிரோட்டம் என்ன? எதை வைத்து இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கிறது? முன்னேற்றக்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிசப் பாதையில் ஈழம் செல்வதற்கு மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்!

## இனங்களிடையே சமத்துவம் மலர்ந்தாலே சமதர்மம் இந்நாட்டில் தோன்ற முடியும்!

ஈழத்து நாதன்

ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் ஆளவந்தாரின், அவர் தம் அடிதொழுது மடியேந்தி மாரடிக்கும் மானங்கெட்ட—நாம் தமிழரென்ற உணர்ச்சியற்ற ஈனப் பிறவிகளின், திருவாய்களிலே மலருகின்ற—மலிந்துபோன கோஷம், நற்றமிழ் இனத்திற்கு நாசம் விளைவிக்கின்ற சோஷலிசம் என்னும் மந்திரம்.

சமதர்மத்திற்குப் பொருளும், உயிரும், உருவமும் கொடுத்து, உயர்வுதாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கி, சமதர்ம தத்துவத்தை நிலைநாட்டி உலகுக்கு வழிகாட்டிய தமிழர் சமூகம்—இன்று அதே சோஷலிச ஆயுதத்தால் சிரழிக்கப்படும் செயலைக்கண்டு வேதனைப்பட வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் கைகோர்த்தும் கனிவான மொழி சொல்லியும் அடுத்துக் கெடுத்த அரசியல் பாதையைத் தொடுத்துச் சென்று தமிழினத்தின் கதையை முடித்துக்கொள்ளவும், இன்றைய அரசியலில் ஆளும் இனம், ஆளப்படும் இனம் என இரு இனங்களை உற்பத்தி செய்து, நாட்டிலே நயவஞ்சகத்தையும், சுயநலத்தையும், பயப்பீதியையும் விதைத்து விபரீத விளைவுகளை ஏற்படுத்தி, தமிழர் சமுதாயத்திற்கு ஆழக்குழி தோண்டும் இறுதிக்காட்சியில்—கடைசிக் கட்டத்தில் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளவும் பயன்படுத்தும் கடைசி ஆயுதம் தான் சோதாக் கும்பல்களின் சோஷலிசக் கோஷம்.

### மொழிப் பிரச்சினை தோன்றிய காலகட்டம்

ஆட்சியாளர்களின்—சிங்கள வெறியர்களின் சூழ்ச்சிக்கு-சுயதேவைக்கு வடக்கு கிழக்கிலே குடைபிடிக்க—வரவேற்புக் கொடுக்க வழுக்கி விழுந்த சில தொளுக்கு முதலிகள் அதே சோஷலிசப் பல்லவியை, பாடத்தை ஒப்புவிக்கும் மாணவனைப்போல் பொருள் புரியாது—பொதிந்து கிடக்கும் சதிதெரியாது மேடைக்கு மேடை புலம்பித் திரிகின்றார்கள்.

சோஷலிசம் பேசுகின்ற சோரம்போன தலைவர்களும்—வடக்கு கிழக்கிலே இருக்கின்ற அவர்களது தரகர்களும் உண்மையான சமதர்ம சமுதாயத்தைப் படைக்க விரும்பினால் மொழிப் பிரச்சினை எழுந்த காலகட்டத்தையும், சூழ்நிலையையும்—இப் பிரச்சினைக்கு உருக்கொடுத்த வர்க்கத்தையும் சிந்தித்து, உலக சோஷலிசக் கர்த்தாக்களின் மொழி சம்பந்தமான தத்துவங்களையும் மனத்திற்கொண்டு தமிழுக்குச் சம உரிமை அளித்து ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும்.

### சுதந்திரம் வந்தபோது...!

நாட்டிற்கு சுதந்திரம் அன்று கிடைத்தது. நாடாளும் பாக்கியம் ஐ. தே. கட்சியான முதலாளி வர்க்கத்திற்குக் கிடைத்தது. ஆங்கிலம் இந்நாட்டின் அரியாசனத்தில் தவழ்ந்தது. அரசாங்க உத்தியோகம்பெற ஆங்கிலம் அவசியமானது.

தமிழ்ப் பகுதிகளில் ஆங்கிலம் பயில அத்தனை வசதிகளும் இருந்தன. இதனால் அரசாங்க அலுவலகங்களில் தமிழர் நிரம்பியிருந்தனர். உத்தியோகக் கல்வியன்றி

## மொழிகளுக்கிடையே சமத்துவம் மறுப்பது சனநாயகமாகாதுஎன்றவர் மாமேதை லெனின்!

வேறு கல்வி இல்லாத சூழ்நிலை. வசதி படைத்தவர்கள் ஆங்கிலக் கல்வி பெற்றனர். வசதியற்றோர் சுய மொழிக் கல்வியிலே தேர்ச்சி பெற்றனர். இதனால் வேலையில்லாத திண்டாட்டம் விசுவரூபமும்—பொருளாதார நெருக்கடி பொறுமை இழந்து பொங்கி எழவும்—உத்தியோகப் போட்டி விரக்தி மனப்பான்மையை ஏற்படுத்தியது.

### ஐ. தே. க சூழ்ச்சி

இப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத ஐ. தே. கட்சி அரசாங்கம், கிளர்ந்தெழுந்த சிங்கள மக்களின் கவனமும், சீற்றமும் தன் பக்கம் திரும்பாதபடி மொழிப் பிரச்சினையைத் தூண்டித் திசை திருப்பியது.

இவ்வேளையில் தேர்தல் வந்தது. ஆட்சி பீடத்தைக் கைப்பற்றக் குறுக்குவழிகள் கையாளப்பட்டன. உத்தியோகத் துறையில் பெரும்பான்மையாக இடம்வகித்த தமிழர்களைக் காட்டிச் சிங்கள மக்கள் மத்தியில் வெறியையும், ஆவலையும் ஊட்டினர். சிங்கள மக்களது பொருளாதார-வேலையில்லாத் திண்டாட்டங்களை ஒழிக்க வேண்டுமானால் சிங்கள மொழி ஆட்சி மொழியாக்கப் படல் வேண்டும் எனப் பிரச்சாரம் செய்ததன் மூலம் நாட்டிலே குழப்ப நிலைக்கு வித்திட்டனர்.

### வகுப்பு வாதம் தலையெடுத்தது

இதனால், வகுப்புவாதத்திற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டதோடு — பொருளாதார அடிப்படையில் சிங்கள மக்களுக்கு உயர்ச்சியும் அதற்குரிய வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தி தமிழருக்கு வீழ்ச்சியும் ஏற்பட அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் பிரதிபலிப்பு உத்தியோகத் துறை தொடக்கம் வணிகத் துறைவரை இன்று தமிழர் தாழ்ந்த நிலையில் தள்ளி வைக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைப் படைக்கச் சமதர்மப் பாதையில் செல்லும் வாய்ச் சொல் வேதாந்திகள் பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வுக்கு வழிசமைத்திருக்கும் அடிப்படைப் பிரச்சினையான மொழிப் பிரச்சினையைத் தீர்த்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்கப் பிரசைகளுக்குச் சமவாய்ப்பளிக்கும் வண்ணம் தமிழையும் ஆட்சி மொழியாக்குதல் வேண்டுமல்லவா?

### மொழிப் பிரச்சினைக்கு முடிவு வேண்டும்

மொழியுரிமை இழந்ததால் தமிழர் இழிநிலைக்கும்—அழிவு நிலைக்கும் ஆளாக்கப்பட்டு—வாழ்க்கையில் முன்னேற முடியாதபடி குழி பறிக்கப்பட்டிருக்கும் போது—தமிழர் வாழ்வுக்குப் பழி சமைத்த மொழிப் பிரச்சினைக்கு முடிவு காணாது சோஷலிச சமுதாயத்தை உருவாக்க நினைப்பது இராவணன் இல்லாது இராமாயணத்தைப் படைக்க முற்படுவதற் கொப்பானதாகும்;

அடுத்தபடியாக சமதர்மத்தை நிலைநாட்டிய லெனின் அவர்கள் "எந்த ஒரு ஜனநாயகவாதியும் மொழிகள் சரிநிகர்சமான அந்தஸ்து உடையவை என்பதை மறுப்பதில்லை" என அழகாகவும் திட்டவட்டமாகவும் கூறியிருக்கின்றார். ஆனால், இங்குள்ள சோஷலிசக் கோமாளிகள் இதை அறியாது "சிங்கள இசம்" பேச—வடகிழக்கில் இருக்கும் ஏமாளிகள் நீலச் சேலைக்குப் பின்னால் ஓலமிட்டுக் கால் வருடும் காட்சியைக் காணுகின்றோம்.

### காந்தியார் கூற்று

உள்ளத்தில் நஞ்சும் உதட்டளவில் தேனும் பூசி குள்ளத்தனமாக, கொண்டிருக்கும் கொள்கையை வெல்லத் துடிக்கின்ற சிங்கள அரசியல் வாதிகள் சொல்லளவில் கையாளும் மயக்குவார்த்தைகளினூடே நல்லபடியாக நாட்டின் மீது நம்மவர்க்கு விசுவாசமில்லை எனும் இல்லாத குற்றச்சாட்டினை இடையிடையே காணுகின்றோம். அக்குற்றச்சாட்டினை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட நமது தரகர் கூட்டம் தமிழினத்தைப் பார்த்து அறிவுரை கூறுகின்ற அவலக் காட்சி அடுத்தடுத்து நடைபெறுகின்றது.

காந்தி அவர்கள், "சத்தியத்தையும்" அகிம்சையையும் பறிகொடுத்து

(11ம் பக்கம் பார்க்க)

# வாழ்வின் அத்தனை துறைகளிலும் தமிழுக்கு முதலிடம் தருவோம்!

இனத்துவேஷியாம் நான்—வேற்று மொழிபேசுபவர் மாத்திரமல்ல, எனது மொழி பேசும் என்னினத்தவன் (!) கூடச் சொல்கிறான். இனத்துவேஷியாம் நான்—வேற்று மொழிக்காரன் என்னை இனத்துவேஷி என்று சொல்லும் போது, எமது இனத்தின் வளர்ச்சியின் மேலேற்பட்ட பொருமையால், வெறுப்பால் சொல்கிறானென்ற எண்ணத்தால் அவனது நிலையை எண்ணி வெட்கப் படுகிறேன்—ஆனால் எனது இனத்தவனே என்னை 'இனத்துவேஷி, எனக் குறிப்பிடும் போது, இன மொழிப் பற்றற்ற அவனது வெட்கக் கேடான பிறப்பை எண்ணி வேதனைப்படுகிறேன்—

இத்தனைக்கும், என்னை 'இனத்துவேஷி' என்று அவர்கள் குறிப்பிடுவதற்கான காரணம் மிக மிக அற்பமானது—நான் எனது தாய்மொழியில் எனது இனத்தவனுடன் கதைக்கிறேனும்—எனது அன்னைத் தமிழில் பிறருடன் தொடர்பு கொள்கிறேனும் — எனவே நான் இனத்துவேஷியாம்—தன் தாய்மொழியில் அம்மொழி தெரிந்தவரிடம் கதைப்பவன் இனத்துவேஷியானால், தன் தாயுடன் கதைப்பவனை என்ன பெயர் கொண்டு அழைப்பார்கள் இவ்வற்பர்கள்! எனது மொழி தெரிந்தவனிடம் எனது இனத்தவனிடம் எனது அன்னைத் தமிழில் நான் கதைப்பேன்—தொடர்பு வைப்பேன்—இதைக் கேட்க இவர்கள் யார்?

தமிழ்ப் பத்திரிகைகளை நான் வாசித்தால் நான் மொழி வெறிகொண்டவனும்; தமிழ்ப் பாடல்களை நான் விரும்பி கேட்டால் நான் இன வெறியனும்; தமிழ்ப் படங்களை நான் பார்த்தால் நான் விதேச உணர்வு கொண்டவனும்! எனது மொழிப் பத்திரிகையை நான் வாசித்தால் என் இனத்தவனே சில சமயம் கேலி செய்கிறான் — இதை எண்ணும்போது, வேதனை தான் விஞ்சுகிறது—

சில தமிழர் தமிழ்ப் பத்திரிகை வாசிப்பதை இழிவான செயலெனக் கருதுகிறார்கள்; தரமான தமிழ்ப் பாடல்களைக் கேட்பதை தரக்குறைவான செயலென எண்ணுகிறார்கள்; தமிழ்ப் படங்கள் பார்ப்பது அநாகரீகமான செயலெனக் கூறுகிறார்கள்—இவற்றிற்கெல்லாம்மேலாக அப்படிச் செய்பவர்களைக் கேலியும் செய்கிறார்கள் — இது தான் வேப்பங்காயாக அமைகிறது—வீட்டிலே, காரியாலயத்திலே, வீதியிலே, புகையிரத நிலையத்திலே, பேருந்து நிலையத்திலே தமிழருடன் தமிழிலே நான் கதைத்தால் நான் வெறியனும்; பண்பு தெரியாதவனும்; பிற்போக்குவாதியாம். இப்படி

தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

எனக்கு 'இனத்துவேஷி' 'வெறியன்' 'பிற்போக்குவாதி' என்றெல்லாம் மகுடங்கள் சூட்டுபவர்கள் தங்களைத் தாங்களே 'மூற்போக்குவாதிகள்' என்று அழைத்துக்கொள்வது தான் கேலிக்கிடமாயுள்ளது— இப்படிப்பட்டவர்களை அறிவுலக மேதை அமரர் அண்ணா

இணுவை
இரகு. சிறீதரன்

வார்த்தைகளாற் சாடியது ஞாபகத்திற்கு வருகிறது—

"எத்தனை எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக்கொண்டோம். கொற்றம் இழந்தோம்; கோட்டை இழந்தோம்; வாணிபம் இழந்தோம்; விருது பலவற்றை இழந்து நிற்கிறோம்! தொழில் வளம் இழந்தோம்; தோழர்களை இழந்தோம்; கலம் இழந்தோம்; காவியம் இயற்றும் திறன் இழந்தோம்; இத்தனை இன்னல்களும் தாங்கிக் கொண்டோம்; ஆனால், தமிழ் மொழியிடம் தமிழன் காட்ட வேண்டிய பற்றினை தாய் மொழிக்குப் பேராபத்து எனின் துடித்தெழுந்து போரிடும் வீரத்தினை தாய்மொழியைத் தாழ்த்திப் பேசி மொழி ஒன்றினைப் புகுத்திடும் [illegible] எதிர்த்திடும் வீரத்தினை, ஒரு தமிழன் தமிழ் நாட்டில், நாம் உயிருடன் உலவிக் கொண்டிருக்கும் நாட்களில் 'மொழி வெறி' என்று கேலிபேசி இகழ்வது, அதை நாம் கேட்டுக் கொண்டு நிற்பது எனும் இந்தக் கொடுமையையுமா தாங்கிக் கொள்ளவேண்டும்?"

இந்தக் கூற்றை இன்றைய ஈழத்தின் நிலையை எண்ணித் தான் தீர்க்கதரிசி போல் அன்றே அண்ணா கூறினாரோ என்னவோ! இன்றைய நிலையிலே தாங்க முடியாத நிலைக்கு வந்துவிட்டோம்! கொதிக்கிறது எமது தமிழ் நெஞ்சம்!

ஆனால் ஒன்றை மட்டும் எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது—எமது பேச்சிலே பைந்தமிழிருக்கு மட்டும் மூச்சிலே முத்தமிழ் வாழுமட்டும், உடலிலே உயர் தமிழும் உயிரிலே உன்னத தமிழும் உள்ள மட்டும், இரத்தத்திலே இன் தமிழும், இதயத்தில் இளந் தமிழும் இலங்கு மட்டும், பார்வையிற் பழந்தமிழ் பிரிடு மட்டும், எம் பசியிலே பண்டைத் தமிழும், பழக்கத்திற் பாரி புகழுந் தமிழும், கருத்திலே கன்னித் தமிழும் களிநடம் புரியுமட்டும் எம் அங்கமெல்லாம் அன்னைத் தமிழ் அரசாட்சி புரியுமட்டும், நாம் எம்மினத்தவனுடன் தமிழிற்தான் கதைப்போம்; தமிழிற்தான் தொடர்பு வைப்போம் — தமிழ்ப் பத்திரிகைகளை வாசிப்போம் — தமிழ்ப் பாடல்களை விரும்பிக் கேட்போம் — தமிழ்ப் படங்களை ஆவலுடன் பார்ப்போம் — இவற்றை எந்த 'முற்போக்குவாதி' யும் தடுத்து நிறுத்திட முடியாது; இது உறுதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வரலாறு எழுதாத காரணம் என்ன?

## பேராசிரியர் அன்பழகன் விளக்கம்

நானும் நாவலர் அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் பொழுது அங்கு பேராசிரியராக இருந்த சதாசிவப் பண்டாரத்தார் கல்வெட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டு மற்றவர்கள் சொல்லாததையெல்லாம் சொன்னார். பாண்டியர் வரலாறு—சோழர் வரலாறு—பல்லவர்களின் ஒரு பகுதி வரலாறு ஆகிய வரலாறுகளை எழுத அவருக்கு அது பயன்பட்டது.

நாங்கள் படிக்கும்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு ஸ்பெயின் நாட்டைச்சேர்ந்த ஹீராஸ் என்ற அறிஞர் வருகை தந்து பேசுகையில் மோகஞ்சதரோ—ஹரப்பா நாகரிகம் தமிழர்கள் நாகரிகம் என்றும், பாண்டியரது ஆட்சி அங்கெல்லாம் பரவியிருந்தது என்றும் அரிய சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார். அப்போதுதான் புதுச்சேரியில் அரிக்கமேடு அகழ்ந்தெடுக்கப்பட்டு ஆராய்ச்சித் துறையில் புது எழுச்சியை உண்டாக்கியது.

தமிழகக் கல்வெட்டு ஆராய்ச்சி—தொல் பொருள் ஆராய்ச்சி சீர்பட்டால்தான் தமிழக வரலாற்றை நாம் முழுமையாக அறிய முடியும். தமிழக வரலாற்று ஆராய்ச்சியைத் தொடக்கி வைத்த பெருமை சேசையர், இராமச்சந்திர தீட்சிதர் போன்றவர்களையே சாரும்.

எந்தக் கண்ணோட்டத்தில் தமிழ்நாட்டு ஆராய்ச்சி தொடக்கப்பட வேண்டுமென்றுபேராசிரியர்சுந்தரம் பிள்ளை சொன்னாரோ அது இன்னும் நிறைவேறவில்லை. காவிரிக் கரையிலிருந்து தொடங்கினால்தான் இந்திய வரலாற்றையே அறிய முடியும்.

தமிழர்களில் பலருக்கு வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற உண்மையான அக்கறை இல்லை. மேல் நாடுகளில் தங்கள் நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ளத் தங்களையே ஒப்படைக்கிறார்கள். தமிழ்நாட்டு வரலாறு தொன்மையுடையதாக இருந்தும் ஆராய்ச்சியில் இன்னும் அக்கறை ஏற்படவில்லை.

மற்ற நாடுகளில் எழுதியுள்ளதைப் போல் நமது முன்னோர்கள் நம் நாட்டு வரலாற்றை எழுதவில்லை.

தமிழ்ச் சமுதாயம் மிகவும் பண்பட்ட முதிர்ச்சியடைந்த சமுதாயமாக இருந்ததால்—உலக நாடுகளுக்கு நாகரிகத்தின் முன்னோடியாக இருந்ததால் எப்படியும் நம்மைப் பார்த்துத்தானே மற்ற நாடுகள் நாகரிகத்தை—அறிவியலைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்ற அலட்சிய மனப்போக்கில் வரலாற்றை எழுத விரும்பவில்லை.

சிலப்பதிகாரம் ஒன்றுதான் ஓரளவுக்கு தமிழக வரலாற்றை உணர்த்துவதாக இருக்கிறது. சங்க இலக்கியங்கள் வரலாற்றுச் செய்திகளைத்தான் தருகிறதே அல்லாமல் வரலாறுகளை அறிவிக்கவில்லை. வளமான—செழிப்பான வீர வாழ்க்கை வாழ்ந்ததால் பண்டைத் தமிழர்கள் வரலாற்றை ஒரு பொருட்டாக மதித்து எழுதி வைக்கவில்லை.

நான் கல்லூரியில் படித்த நேரத்தில் உத்தரமேரூர் கல்வெட்டு பற்றிக் கூறினார்கள். உடனே வியப்பு உணர்வு ஏற்பட்டு கல்வெட்டு ஆய்வு பெற நானும் என்னுடன் பயின்ற மாணவர்களும் நினைத்தோம் கல்லூரிப் படிப்புக்குப்பிறகு எங்கள் வாழ்க்கை வேறு திசையில் திரும்பி விட்டதால் இந்தத் துறையில் இறங்க முடியவில்லை. கல்வெட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களால் நாட்டுக்கு சில உண்மைகள் கிடைக்கவேண்டும் என்ற வகையில் பணியாற்ற வேண்டும். தமிழ் மொழியின் சிறப்பை தரணிக்கெல்லாம் உணர்த்த வேண்டும்.

---

# [5] கண்டிச் சீமையிலே தெரியாத சங்கதிகள்!

### வரலாறு காட்டும் தேயிலைத்தோட்ட நாட்டுப்பாடல்கள்

மலையகத்தில் தேயிலைத் தோட்டங்கள் உருவாவதற்கு முன்—கோப்பியே பயிரிடப்பட்டது. 1824-லிருந்துதான் கோப்பிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. கடல் கடந்து வந்த தமிழ்த் தொழிலாளர்கள் உழைப்பால் 1835—1845-ம் ஆண்டுகளுக்கிடையில் 367 தோட்டங்கள் உருவாயின.

முதலில் பாலங்கள் பாதைகள் முதலான பொது வேலைகளுக்காகவும் (1821-ம் ஆண்டிலிருந்து) பின்னால்தான் கோப்பித் தோட்டங்களுக்கும், தமிழ் நாட்டிலிருந்து தொழிலாளர்கள் திரட்டப்பட்டார்கள். அப்பொழுது ''தவணை முறையில்'' முதலில் தொழிலாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக திரட்டப்பட்டாலும், தேயிலைத் தோட்டங்கள் திறக்கப்பட்ட பின்னர்தான் பெருவாரியாக திரட்டப்பட்டார்கள் பிழைப்பிற்காக வரவும் தலைப்பட்டார்கள்.

இந்தியாவில் இராமப்புறங்களில் வாழ்ந்த மக்களுக்கு மலையகப் பிரதேசங்களில் வாழத் தலைப்பட்டது. புதிய அனுபவமாக இருந்தது. அவர்கள் என்றுமே காணாத வகையில் மழை பொழியும் சூழ்நிலை அமைந்திருப்பது அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

தோட்டங்களுக்குள் நுழைந்ததுமே, வேலைக்கு அறிவித்தல் விடும் சங்கொலியே ஏதோ போல இருந்தது. 'அது எதற்கு' என்று புரியாமல் திகைக்கும் மனவுக்கு இந்த மண்ணைப் பற்றியும், அதில் தாம் அமைத்துக் கொள்ளப்போகும் வாழ்க்கையைப் பற்றியும் புரியாமலே இங்கு வந்து சேர்ந்தனர்.

'' ... ... ...  
... ... ...  
தோட்டம் வருகின்ற  
பாதையிலே கொஞ்சம்  
தோசை பலகாரம்  
வாங்கி தந்தார்  
... ... ...  
போட்டு நடத்தியே  
தோட்டம் வரை அங்கு  
பொழுது விடியவே  
காத்து நின்றார்''

இவர்களை அன்புடன் வார்த்தைகள் கூறி அழைத்துவந்த கங்காணிகள் தோட்டங்களுக்குள் நுழைந்ததுமே தொழிலாளர்களை அடிமைப்படுத்துவதில், தாங்கள் நினைப்பதுபோல் நடத்துவதில் ஈடுபட்டார்கள்.

''ஆத்தாமார்களே சேதி  
என்ன இங்கே  
ஆருக்கு மங்கள  
காரியமங்க  
தாத்தார் கோயில்  
பூசையதோ—இங்கே  
சங்கதி ஒன்னும்  
தெரியவில்லை''

தொழிலாளர்கள் தோட்டம் வந்து சேர்ந்தவுடனே வேலைசெய்ய சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். சூரியன் உதிப்பதற்கு முன்னால், கோழி கூவுகிற வேளையில் வேலைக்கு அழைக்கும் சங்கின் 'ஊ...ஊ' என்ற குரல் ஒலிக்கும். 'தாம் வாழ்ந்து பிறந்த கிராமத்தில்— ஆலயங்களில் கேட்கும் அதே குரல் கேட்கிறதே' என்றுதான் முதலில் புதிதாக தோட்டங்களை அடைந்தவர்கள்—நினைத்தார்கள். மங்கள காரியங்கள் ஏதும் நடக்கிறதோ என்று எண்ணினார்கள்.

''ஊ ஊ என்று  
சத்தமொன்று  
உரமாய் கேட்குது  
ஒருபுறத்தில்  
சங்கதி கேட்டீரோ  
இளமயிலே  
தாளங்கள் கோலங்கள்  
தப்பு முழக்கங்கள்  
இங்கிலீஸ்காரர்கள்  
வேலைக்கழைக்கிற  
இங்கிதமான  
குரலோசை''

என்று இப்படிதான் அவர்களுக்கு எழுந்த சந்தேகங்களை மிகவும் வினயமாக தீர்த்து வைத்தார்கள்.

அடுத்த கணமே,

''ஓசையைக் கேட்டு நீர்  
வேலைக்குப் போகணுமடி  
ஓட்டாண்டியாவாயோ  
உண்மையாக''

என்று கங்காணிகளின் அதிகாரக் குரலும் ஒலிக்க ஆரம்பித்தது.

ஆனால் தோட்டங்களுக்குள் நுழைந்தவுடனேயே கசந்துவிடுகிறது; இந்த வாழ்வு! ''மீண்டும் போய்விடவேண்டும் சொந்த ஊருக்கு'' என்று பலர் முடிவு கொள்கின்றனர்.

''கெங்காணி போட்டு  
பழக்கமில்லை—நாங்க  
கொழுந்து எடுத்தும்  
பழக்கமில்லை  
கங்காணி சேவுகமே-எங்களை  
சிமைக்கு அனுப்புங்க  
சாமி...சாமி

★

''ஏட்டுக்கங்காணி  
முன்னே நிக்க  
ஏழு துரைமாரும்  
வந்து நிக்க  
சில்லரை கங்காணிமாரு  
களே—எங்களை''  
சீமைக்கு அனுப்ப  
வேண்டும் சாமிகளே''

'எப்படியாவது போய்விட வேண்டும், இந்த வாழ்வு இனி ஒரு கணமேனும் வேண்டாம்' என்று முடிவு செய்து, அழைத்து வந்த கங்காணிகளிடம் முறையிட்டனர்!

செலவு செய்து அழைத்து வந்த கங்காணிகள் சும்மா விடுவார்களா? கசையடியும், உதையும் கொடுத்து சித்திரைவதை கூட செய்தார்கள். அவர்களை விட்டுவிடவும் தயாராக இல்லை; தொழில் ஒன்றும் தெரியவில்லை, கெங்காணி போடும் பழக்கமில்லை. கொழுந்தெடுத்தும் பழக்கமில்லை, என்பதோடு, எத்தனையோ பழக்கங்கள், வழக்கங்கள் ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் மீண்டும் சொந்த ஊருக்குப் போகத் துடித்தனர்.

## மலையகத்திலே.........

''காறுதடி காம்பரிசி  
கசக்குதடி காணு தண்ணி  
இனிக்குதடி நம்ம சீமை  
இனிப்பயணம் தப்பாது''

இங்குள்ள உணவு வகைகள் கூட பிடிக்கவில்லை. காம்பு போன்ற அரிசி கசந்தது, தண்ணீரும் நாவிற்கு ருசிக்கவில்லை.

''அட்டை கடிக்குதடி  
அழகுரத்தம் சிந்துதடி  
செல்லு கடிக்குதடி  
சீரழிஞ்ச கண்டியிலே''

ஓயாது மழை பெய்யும் காடுகள் செறிந்த மலைகளில் அட்டையும், குடியிருப்புகளில் 'செல்லு'களும் துன்பம் இழைத்தன. இரத்தத்தை சிந்தவைக்கும் இவற்றின் கடி தாங்கவும், சகிக்கவும் முடியவில்லை.

**தொ. சிக்கன்ராஜா**

''நங்கவரம் சந்தையிலே  
நொங்கு வாங்கப்  
போகையிலே  
கங்காணி ஒருவன்  
என்னை கண்டானே-அவன்  
இங்கித வார்த்தைகளைத்  
தான் விட்டானே  
... ... ...  
அஞ்சு மாதம் வேலைசெய்து  
நொந்து போச்சு  
தேகமெல்லாம்  
பஞ்சம் தீர்ந்த பாடுமில்லை—  
ஐயனே  
பாவிதுயர் கேட்பார்  
இல்லை ஐயனே''

★

''கொண்டையிலே பூவிருக்க  
கொண்டு வந்த கங்காணி  
கொந்தரப்பு வேலையிலே  
கொல்லுறானே  
கங்காணி''

என்று வந்த சில மாதங்களிலேயே வேலையும் பிடிக்கவில்லை; வேலைப்பழுவும் தாங்கமுடியவில்லை. காலைக் கருக்களில் மலை ஏறி மாலை நேரம் மறையும்வரை மாடாய் உழைப்பதில் மனம் சோர்ந்தார்கள்; உடல் மெலிந்து நொந்தார்கள்.

பாதையிலே வீடிருக்க  
பழனிசம்பா சோறிருக்க  
எருமை தயிரிருக்க  
ஏன்டி வந்தா...''

என்று பிழைக்க வந்தவர்களும், பிறந்த மண்ணில் வசதி இருந்தும் சம்பாதிப்பதற்காக வந்தவர்களும் சொந்த மண்ணையே எண்ணி வருந்தினார்கள்.

எப்படியாவது இந்த இலங்கை மண்ணை விட்டு போய்விட வேண்டுமென துடித்தார்கள். கவலையால் சாம்பினார்கள். ஆனால் போவது குதிரைக்கு கொம்பு முளைப்பது போலத்தான் ஆனது. போகமுடியாத வறுமை ஒருபுறம், கங்காணிகளின் கொடுமை மறுபுறம். அதனால் மலைநாட்டு தோட்டங்களிலேயே அவர்களின் கதை சோகம் நிறைந்த நீண்ட கதையாகவே தொடர்ந்தது.

---

### தையிட்டி சைவ முன்னேற்ற கழகம்

தலைவர்:—இ. சின்னத்துரை, உப தலைவர்:—வ. வல்லிபுரம், இணைக் காரியதரிசிகள்:—இ. வல்லிபுரம், சி. சுந்தரலிங்கம், தனாதிகாரி:—ஆ. பொன்னையா, பொறுப்பாளர்:—வை. வேலாயுதம்பிள்ளை. நிர்வாக சபை அங்கத்தவர்கள்:—ந. நடராசா, நா. வேலுப்பிள்ளை, கோ. க. செல்லத்துரை, ந. பொன்னம்பலம், வ. தர்மராசா, க. வல்லிபுரம், ஆ. விசுவர்.

---


### கட்டை வேலி தமிழரசு வா. மு.

நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு:— தலைவர் திரு: ப. ப. தாமு, காரியதரிசி: திரு: பொ: முத்துலிங்கம் தனாதிகாரி: திரு. ந. பெரியதம்பி திரு. வ. தம்பிப்பிள்ளை திரு. வ. கார்த்திகேசு திரு. ந: சிவம் திரு. க. நவரத்தினம் திரு: வே: முத்தையா, செல்வன் மு: சிறீஸ்கந்தராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை

# தீக்குள் விரலை வைத்தால்...!



## யாழ் - ஜனார்த்தனன்

## அத்தியாயம் (2)

மனித மனத்திலுள்ள ஒரு மாபெரும் பலவீனம் என்னவெனில், நடக்கப் போகும் நிகழ்ச்சி எதுவானாலும் அது நிகழப்போகும் சந்தர்ப்பத்தின் ஆரம்பம் வரை அது பற்றி இல்லாத பொல்லாதவற்றை எல்லாம் யோசித்துத் தன்னைத் தானே வீணாக வருத்திக் கொள்வது தான். அப்படித்தான் பாரதியும் பானுமதியும் பொலிஸ் இன்ஸ்பெக்டரைச் சந்தித்தது முதல் என்னவோ எல்லாம் எண்ணிப் பயந்தனர். ஆனால் பொலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்கள் இருவரும் நின்ற தோற்றத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பியவர் ''சரியம்மா, நான் அப்புறம் வந்து பேசுகிறேன்'' என்றார்.

''சார் என்ன விடயம் சார்'' என்றாள் பானுமதி.

''நதிங்; ஆனால் மிஸ்டர் ரகுராமனைச் சந்திக்க வேண்டும் அவனிடமே கூறவேண்டிய விடயம் நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். பயப்படக்கூடியதாக ஒன்றும் நடந்து விடவில்லை.'' என்றார்.

''அப்பாடா'' என்று பாரதியின் கைகளைப் பற்றினாள் பானுமதி.

''என்ன பானு? நீ பயந்திட்டியா? இப்படித்தான் எப்பவாவது பொலீஸார் அவனைத் தேடிக் கொண்டு வருவார்கள். அப்படி என்னதான் செய்கிறானோ அண்ணன்'' என்று பெருமூச்சு விட்டாள் பாரதி.

''அதற்கில்லைப் பாரதி; நான் வந்ததும் வராததுமாக பொலீஸார் உன் அண்ணனைத் தேடிக்கொண்டு வந்ததும், எனக்கு...''

''பைத்தியம் நீ இன்னும் பழைய பானுவாய்த்தானடி இருக்கிறாய். அது சரியடி பானு, நீ இப்பவே போகணுமா?''

''ஆமாம், நான் போய் விட்டு அப்புறமாக வாறேன். இதற்காகவே இன்று கல்லூரிக்கும் லீவு போட்டுட்டேன்'' என்றாள்.

''அடி பைத்தியமே! ஏன் அப்படிச் செய்தாய்? மாலை வந்திருக்கலாமே!''

அப்படி வந்திருக்கலாம் தான் ஆனால் நீதான் வீட்டுக்காரி என்று முன்பே தெரியாமல் போய்விட்டதே பாரதி! அது சரி உங்கண்ணன் இப்போ எங்கே?''

''அவனா? அவன் எங்கே என்று நிச்சயமாகக்கூற முடியாது: விரும்பின நேரம் வீட்டுக்கு வருவான், போவான் அவன் போக்கு அப்படி'' என்றாள் பாரதி.

அப்படியா? சரி பாரதி, நான் வருகிறேன். அம்மாவிடம் கூறு? என்று சொல்லி விட்டுச் சென்றாள் பானுமதி.

வாழ்க்கையின் இனிய பகுதிகளை மட்டும் சுவைத்தவர்கள் வாழ்வு சொர்க்கம் என்பார்கள். துன்பத்தை மட்டும் சந்தித்தவர்கள் வாழ்வு ஒரு மாயக் கண்ணாடி என்பார்கள். ஆனால் ரகுராமனுக்கோ வாழ்வு ஒரு விளையாட்டுக்களம். அவன் வாழ்வைப் பற்றிக் கவலைப் படுபவனாகவோ சந்தோஷமடைபவனாகவோ தெரியவில்லை. அவன் மனதில் எந்த வேளையானாலும் ஓயாத சிந்தனைதான்.

அதிக வெண்மையோ, அதிக கறுப்போ இல்லாத பொது நிறம். சுருண்ட மயிருடன் பக்க வகிடு எடுத்த கிராப்பு, கழுத்தில் புலிநகம் பதித்த தங்கச் சங்கிலி. புன்னகை பூத்த முகத்தில் நெற்றிக்குக் கீழே ஒரு கறுப்பு மச்சம். மேலுதட்டில் அழகான நறுக்கிவிடப்பட்ட மீசை. கறுப்பு நிறத்தில் உயர்ந்த ரக துணியாலான நீண்ட காற்சட்டை: தூய வெள்ளையில் அல்லது மெல்லிய கலரிலான ரெறலின் ஷேர்ட். இதுதான் ரகுராமனுடைய அழகு உருவம். அவன் நடையிலும் சரி, கதையிலும் சரி ஒருவித தனிக் கவர்ச்சி. அந்தக் கவர்ச்சியில் அவனிடம் மயங்காதவர்கள் இல்லை.

பானுமதி பஸ் வண்டியில் பெண்களுக்கான பிரத்தியேக சீட்டில் அமர்ந்திருந்தாள். வண்டிக்குக் குறுக்கே போடப்பட்ட உருக்குக் குழாயில் சாய்ந்தபடியே ஆழ்ந்த சிந்தனையில் லயித்து நின்ற அந்த வாலிபனை ஏனோ அடிக்கடி அவள் பார்த்துக் கொண்டாள்.

அனேகமாக பஸ்ஸில் ஒரு அழகான பெண் ஏறிவிட்டால், அந்த வண்டியில் உள்ள அத்தனை கண்களும் அவளை மொய்த்துத் திரும்பும். பானுமதி பஸ் வண்டியிலிருந்து வெளியே தான் அனேகமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள். ஆனால் அந்த வாலிபனுடைய அலட்சிய மனப்பான்மை அவள் மனதைக் குடைந்தது. அவனுடைய அழகுக் கவர்ச்சியினால் ஏற்பட்ட கர்வமோ? அல்லது பெண் வர்க்கத்தை விரும்பாத மனமோ? ஏன் அவன் அப்படி? என்ற சிந்தனையாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாள் பானுமதி. அதே வேளையில் அவன் விழிகள் பஸ் வண்டியிலிருந்த பானுமதியின் முகத்தில் ஒரே ஒரு நிமிடம் பதிந்து திரும்பியது. பானுவும் பார்த்தாள். அடுத்த கணம் அவன் திரும்பி விட்டான்.

அன்று மாலையில் பானுமதி புது வீட்டுக்குக் குடி வந்துவிட்டாள். அவள் வீட்டுக்கு வந்த பொழுது பாரதியின் தங்கை தம்பிகளும் வந்து விட்டனர். அந்தச் சிறுவீடு கலகலப்புடன் விளங்கிற்று. பானுவுடன் பாரதியின் இளைய தங்கை மாலதி ஒட்டிக் கொண்டுவிட்டாள். 'ரீச்சர் ரீச்சர்' அவளைச் சுற்றிவர ஆரம்பித்துவிட்டாள்.

'மாலதி உன்னை விடமாட்டாள் போலிருக்கே பானு' என்றாள் அன்னபூரணி அம்மாள்.

'அவள் சின்னப்பெண் தானே. நான் ரியூசன் சொல்லிக் கொடுப்பேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையெனில் என்னுடனே இருப்பாளாக்கும்.' என்றாள் பானு.

'எனக்கென்னடியம்மா அவள் விருப்பம் [illegible] பம். என் பிள்ளை எதுதான் என் இஷ்டப்படி நடக்கின்றது!' என்றாள் அன்னபூரணி.

'ஏன் அம்மா நான் இல்லையா?' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் சிவராமன். அவன் தான் பாரதியின் இளைய தம்பி.

'சிவா, நீசரி, வேறு யாரும் சரி, அதாவது ஆண்கள் இந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கப்படாது.' என்றாள் அன்னபூரணி.

'ஏன் ரீச்சர், அப்படித்தானா? உங்களுக்கு ஏதாவது வாங்குவதாயிருந்தால், என் உதவியில்லாமல் எப்படி வாங்குவீர்களாக்கும்?' என்றான் சிவராமன்.

'ஏன் அம்மா, சிவா சிறுவன் தானே? அதனால் என்னம்மா' என்றாள் பானு.

'பானு இவர்களெல்லாம் மெல்லமெல்ல வந்து உனக்குத் தொந்தரவு தருவார்களே என்றுதான் பார்த்தேன். சரி உன் இஷ்டப்படியே செய்து கொள்ளேன்.' என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றாள் அன்னபூரணி.

ஃ ஃ ஃ

காங்கேசன்துறையில் உள்ள பொலீஸ் நிலையத்தில், குற்றத்தடுப்பு இலாகா இன்ஸ்பெக்டர் விக்டர் இமானுவேல் எதையோ தேடிக்கொண்டே இரண்டு மூன்று பைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவருடைய நெற்றியில் வியர்வை அரும்பி நின்றது. அதே வேளையில் உள்ளே நுழைந்த இரகசியப் பொலீசான கபூர், 'என்னசார் ஃபானைக் கூடப்போடாமல் தேடிக் கொண்டிருக்கின்றீர்கள்?' என்றவாறே மின்விசிறியின் சுவிச்சைத் தட்டிவிட்டான்.

'ஓ... கபூர். நீங்கள் வந்ததும் நல்லதாய்ப் போய்விட்டது. ரகுராமன் இருக்கிறானே, அவனுக்கு ஒரு வேலைக்குச் சிபாரிசு செய்ய வேண்டியிருக்கு. நான் போவது சரியல்ல. அதில் உங்கள் உதவிதேவை' என்றார்.

'சார்' என்று கூறிச் சிரித்த கபூர் தலையாட்டியபடி அங்குமிங்குமாகச் சிறிது நேரம் உலாவினார்.

'ஏன் சார், அந்த ஏற்றுமதி இறக்குமதிக் கம்பனி...'

'ஜெஸ் ஜெஸ் அப்துல்லாவுக்குக் கூடிய பங்குண்டு. அவனுக்கு அறிமுகமான ஒருவரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கினால் நல்லது.'

'ஆல்ரைட் அப்படியே செய்கிறேன்' என்று கூறிக் கபூர் எழுந்தபோது தொலைபேசிமணி ஒலித்தது.

இன்ஸ்பெக்டர் இமானுவேல் போனை எடுத்து 'ஹலோ இன்ஸ்பெக்டர் இமானுவேல் ஸ்பீக்கிங்' என்றார்.

[illegible] பேசுகிறேன். 'அப்துல்லா அன் கோ'வில் எனக்கு இடம் கிடைத்துவிட்டது: உங்கள் சிபாரிசு இன்றியே வேலை கிடைத்துவிட்டது. இதை அறிவிக்கத்தான் அழைத்தேன் சார்.'

'நல்லது ரகு, உன் பெயருக்கு எந்த விதமான இழுக்கும் வராமல் நடந்துகொள். இந்த வேலையை மட்டும் ஒழுங்காகப் பார்த்தியோ உனக்குப் புறமோஷன் நிச்சயம்.'

'ஒழுங்காகவும் நம்பிக்கையோடும் நடப்பேன் சார். உங்கள் ஆதரவுக்கு நன்றி' என்று கூறி முடித்தான்.

போனை வைத்துவிட்டுப் புன்சிரிப்புடன் கபூரைப் பார்த்தார் இமானுவேல். கபூர் தலையாட்டியபடியே 'மிஸ்டர் ரகு கெட்டிக்காரன்தான். யாரையோ பிடித்துக்கொண்டு நுழைந்து விட்டான். நல்லவன்தான், ஆனால் அவன் அண்ணன் ராஜாராமனோ அவனைப் பற்றி நல்லதாக ஒரு வார்த்தையேனும் கூறக்காணோம்' என்றார்.

'கபூர்' ரகுராமன் ஒரு இடத்திலாவது ஒழுங்காக வேலைசெய்தாலல்லவா வீட்டினர் அவன் மீது நல்லபிப்பிராயம் வைத்திருப்பார்கள்' என்று கூறிச்சிரித்தார்.

'இதுவும் கொஞ்ச நாளைக்குத்தானோ என்னவோ?' என்றார் கபூர்.

'கபூர், இதில் கொஞ்சக் காலமாவது ரகு நிலைத்திருப்பான் என்றுதான் தோன்றுகிறது. அப்துல்லா லேசான புள்ளியில்லை. ரகு ஏதும் தப்புத் தாண்டா செய்தானோ தொலைச்சுப் போடுவான்' என்றார் இமானுவேல்.

'நான் வாரேன்சார் என்று கூறிவிட்டுச் சென்றார் கபூர்.

ஃ ஃ ஃ

காலையில் துயில் நீங்கி எழுந்த பானுமதி தன்னைக் கட்டி அணைத்தவாறே படுத்திருக்கும் மாலதியின் கன்னத்தில் முத்தமிட்டவாறே எழுந்திருந்தாள். அவள் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வருவதற்குள் மாலதி எழுந்து வீட்டுக்குள் ஓடிவிட்டாள்.

கல்லூரிக்குப் புறப்படுவதற்கு முன்பு, சமையல் வேலைகளை முடித்துவிட்டுத்தான் குளிக்கச் சென்றாள் பானுமதி. அதே வேளையில் ''பானு பானு'' என்று ஓடி வந்தாள் பாரதி.

''என்ன பாரதி'' குளியல் அறையில் இருந்தவாறே குரல் கொடுத்தாள் பானுமதி.

''பானு நேற்றுப் பயந்து விட்டதாகக் கூறினாயல்லவா?''

'எதற்கு'

'நீ வந்ததும் வராததுமாகப் பொலீஸ் வந்துவிட்டதேயென்று'

''ஆமா... அது... மறுபடியும் பொலீஸ்...''

''இல்லை பானு, எங்க அண்ணுவுக்கு 'அப்துல்லா அன் கோவில்' வேலை கிடைத்துவிட்டதாம். போன் செய்தான்.''

''அப்படியா! சந்தோசம் பாரதி'' என்று கூறிக் கொண்டே சேலையைச் சுற்றிக்கொண்டு வந்தாள் பானு.

''வேலை என்னமோ கிடைச்சுது. ஒழுங்காயிருப்பானோ, அல்லது இரண்டு மூன்று மாதமோ யார்கண்டது'' என்றாள் பாரதி.

''பாரதி! இந்த முறை உங்கள் அண்ணா வந்தால் நானே கூறிவிடட்டுமா?''

''நீயா என்ன கூறப் போகிறாய்?''

''வீட்டுக்கு நல்ல பிள்ளையாய் வாழுங்கள் என்று தான்.

''பானு, என்று கூறிவிட்டுச் சிரித்தாள் பாரதி.''

''ஏன் பாரதி சிரிக்கிறே.''

''பானு உன்னை எண்ணி நானே பயந்து சாகிறேன். நீ என்னடாவென்றால் அவனுக்குப் புத்தி......'' என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தாள் பாரதி.

''பாரதி! உங்கண்ணன் இப்படி ஊர் சுற்றும் வேளையில் அவருக்குப் பணம் கொடுத்து உங்கள் அம்மா தானே கெடுக்கிறார்கள்.''

''பணமா? அம்மாவா?''

''ஆமா''

''அதுதான் இல்லை பானு. அவன் ஒரு சதம் கூட ஒருத்தரிடம் வாங்கமாட்டான். இன்னும் சேலை, துணி, அது இது என்று வாங்கிவந்து தருவானேயன்றிப் பணம் கேளான். ஆனால் அம்மாக்குக்கும்பணம் கொடுப்பான். எப்படிப் பணம் வருகுது என்றுதான் தெரியாது.''

''ஏன் கேட்பதுதானே?''

''கேட்டாலும் சொல்லான். அவன் தான் ஒரு விசித்திரப் பிறவி என்றேனே'' என்று சிரித்தாள் பாரதி.

'பாரதி உன் அண்ணனை ஒரு சமயம் புகழ்கிறாய் ஒரு சமயம் ஏசுகிறாய். ஒரு சமயம்...'

'பானு, அவன் ஊரும் உலகமும் மெச்ச வாழ்ந்தால் எனக்குச் சந்தோஷம் தான் பானு. நாங்கள் அவனைப் பேசுறம். ஊரார் பேசுகிறார்கள். ஆனால் அவன் கவலைப்படமாட்டான். பதிலுக்குச் சிரிப்பான். அந்தச் சிரிப்பிலே எத்தனையோ பெண்கள் மயங்கி அவன் பின்னே சுற்றுவார்கள்.'

'என்ன பாரதி! அப்படிப் பட்டவனா உன்......'

'நீயே அவனைப்பார்த்தால்... ஆனால் நீ அப்படியில்லைப் பானு ஆனால்....'

'மயங்கிவிடுவேன் என்று கூறுகின்றாயா? பாரதி! இந்தப் பானு எவரிடத்திலும் தன்னை இழந்து விடமாட்டாள்' என்று கூறிச் சிரித்தாள்.

அன்று போயா தினம். காலை ஏழுமணியிருக்கும். முல்லைப் பந்தலில் பூக்கள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தன. குண்டு குண்டாய்க் குலுங்கும் மல்லிகைப் பூக்களைக் கொய்து கையிலிருந்த தட்டில் போட்டவாறே, மேலும் மலர்களைக் கொய்து கொண்டு நின்றாள் பானுமதி. அவளுடைய பின்னழகு ஏறக்குறையப் பாரதி போன்றிருந்தாலும், முன்னழகில் பாரதியைவிட மேலும் அழகானவள் என்று

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சில் இரவு

நரகம் —இது ஓர் 'இருட்டுச்' சொல்!

நட்பு —இது ஓர் 'உறவு' ஓசை!

விதி —இதுஒரு 'சோம்பேறிச்' சத்தம்!

வேலை —இது ஓர் 'உழைப்பு' வாசகம்!

கள் —என்பது 'காரச்' சொல்!

விஷம் —இது வெறுப்பு, வார்த்தை!

பாம்பு —அச்ச உச்சரிப்பு!

மக்கள் சில சொற்களைக் கேட்டு சிரிக்கின்றனர்; சில சொற்களை கேட்டு சீறுகின்றனர்!

தண்ணீர் மலரைக் குறிக்கும் 'தாமரை' என்னும் சொல், துட்டச் சொல் அல்ல: கெட்டச் சொல் அல்ல; அது இரும்புச் சொல் அல்ல; இனிக்கும் கரும்புச் சொல்!

ஆனால் கிளியேந்தி என்பவள் அந்தச் சொல்லைக் கேட்டு அச்சப்பட்டாள். அதற்குக் காரணம் தாமரை மலரை அவள் தணல் என்று தவருக கருதி வந்ததுதான்! அதனுல் அவள் தடாகத்திற்குச் செல்வதில்லை; சென்றதுமில்லை; பசலைப் பிராயத்திலிருந்து அவள் கேணியிலே நீரெடுத்து தன் மேனியைக் கழுவி வந்தாள்!

கிளியேந்தியை எப்படியாவது குளத்திலே குளிக்க வைத்துப் பார்த்துவிட வேண்டும், என்று அவளுடைய மூச்சுத் தோழிகள் பல தடவை முயன்றனர். அவள் ஒரு தடவையாவது ஏமாறவில்லை!

தோழிகள் தோல்வி கண்டனர்; தோகை வெற்றி பெற்றதால்!

அவள் அழகி! அவள் அழகு ஊரிலே உள்ள பலரி பார்வைக்குபயன்பட்டது! அவ்ள் ஒரே ஒரு ஆணழகனுக்குப் பயன்பட்டாள்! அவன்தான் அவள் உயிர்க் காதலன் உலகப்பன்!

உலகப்பனைச் சந்திக்க 'நள்' என்னும் ஒலியை எழுப்பும் இரவிலே அவள் புறப்பட்டாள்: புறப்படும் போது அவள் கூந்தல் கூடையிலே மலர்கள் இருந்தன. மாந்தளிர் மேனி மீது ஆபரணங்கள் இல்லை!

பெண்கள் ஆபரணங்கள் அணிவதை அவள் வெறுப்பவள். நகை நாகரீகத்தின் பகை! பெண்களுக்குப் போடும் பொன் விலங்கு என்பது அவள் எண்ணம்!

பெற்ருேரிடம் அவள் புடவை கேட்பாள், புத்தகம் கேட்பாள், பொன்னுபரணம் கேட்பதே இல்லை! அதனுல் அவள் 'ஆபரண ஆபத்து' இல்லாமல் பூ அசைய புடவை அசைய அந்த நள்ளிரவிலே நடந்தாள்—

அவள் உதடுகளுக்காக அவன் வந்தான். அவன் ஒற்றடத்திற்காக அவள் வந்தாள்.

சந்தித்தனர். ஆண்பாலும் பெண்பாலும் சந்தித்தன.

ஒருவரை ஒருவர் நோக்கினர். குவளை மலரில் தாமரை மலரும் தாமரை மலரில் குவளை மலரும் அவர்கள் பார்வையிலே பூத்தன—

அவன் கரத்திலே ஒரு நெல்லிக்கனி இருந்தது. அதனைக் கண்ட அவள் இது எதற்காக என்ருள்.

இதுவா? குயில் நெல்லிக்கனி தின்னும்; அதனிடம் கொடுக்கத்தான் இங்கு கொண்டுவந்தேன், என்று கூறிக் கிளியேந்தியிடம் கொடுத்தான்.

அவள், அவன் தந்த கனிப்பரிசுக்கு 'கன்னப் பரிசு' தந்தாள். முதலில் அவர்கள் பார்வைப்பசி தீர்ந்தது பிறகு 'வேர்வை வேலை' ஆரம்பமாயிற்று!

தாமரையில் தேன் எடுத்தான்; கனியை மற்ருெரு தடவை கனியாக்கினுன்!

''உப்பு ஊறும் வாய்க்கு தித்திப்பு தருகிறீர்கள் அத்தான்'' என்ருள் அவள்!

'பிஞ்சு தின்ற வாய்க்கு நீ பழம் தருகிருய் என்ருன் அவன்.

'நேற்று வரையில் நான் மருந்தில்லாப் புண்ணுக இருந்தேன்' என்று கூறினுள் அவள்.

'மதியில்லாத விண்ணுகத்தான் நானும் இருந்தேன்' என்று கூறினுன் அவன்.

'காதல், உருவத்தை நேசிக்கிறது' —இது அவன்.

'ஆசையும் மோகமும் அவ்வுருவத்தின் நிழலைத்தான் நேசிக்கின்றன'—இது அவள்.

'ஆசை' என்பது ஒரு செயற்கை உணர்ச்சி அன்பு—இயற்கை உணர்ச்சி என்ருள் அவள்.

இல்லை, ஆசையைப் போலவே அன்பும் செயற்கை உணர்ச்சிதான்:

பிஞ்சு காயாகி காலத்தின் உதவியால் முத்தி பிறகு கனியாவதைப் போன்றுதான் அன்பு என்பதுகூட!

முதலில் நான்,

சந்தனத் தோப்பில் உன்னைச் சந்தித்தேன். சந்தித்த பிறகு அடிக்கடி உன்னை நினைக்க ஆரம்பித்தேன். நினைக்க நினைக்க என் உள்ளத்திலே உணர்ச்சி ஓங்கியது. உணர்ச்சி ஓங்க ஓங்க உள்ளம் தளர்ந்தது. அந்தத் தளர்ச்சியால்தான் உன்மீது எனக்கு அன்புஏற்பட்டது!

ஒரு பொருளை அடிக்கடி நினைக்க நினைக்க உள்ளத்திலே உணர்ச்சி ஓங்குகிறது. உணர்வு ஓங்கும் போது உள்ளம் இளகுகிறது. அதனுல் மனம் பதப்படுகிறது. இந்த மனேநிலையைத்தான் 'அன்பு' என்று அழைக்கின்ருேம். ஆகவே அன்பு என்றது ஆசையைப்போல உடனே வடிவம் பெற்று விடுவதில்லை. இத்தனைபடிகளுக்கு பிறகுதான் அது உருவாகிறது என்ருன் அவன்.

காதலன் விளக்கத்தைக் கேட்டு தன் கன்னத்தில் அவன் இதழ்களை ஏந்தினுள் அந்தக் கிளியேந்தி!

அவன், அவள் கருங் கூந்தலைக் கோதிக்கொண்டே, 'அன்பே, உன் அங்கம் மின்னுகிறது. அந்த அங்கத்திலே ஆபரணம் மின்னவில்லையே! ஏன்?' என்று கேட்டான். அதற்கு அவள்.'

'குற்றுலக் குறவஞ்சி நூலிலே வர்ணிக்கப்படும் குறத்திபோல் ஆபரணங்கள் அணிவதை நான் விரும்பவில்லை: அரசன் அவுரங்கசீப்பின் அருமை மகள் சைபுன் நிஸ்ஸாவைப் போல் புடவை மட்டும் உடுத்திய பெண்ணுக இருக்க விரும்புகிறேன்.

பெற்ருேர் என்னிடம் முத்தாரத்தைக் கொடுத்தனர். நான் அதனை பிறை நிலாவிடம் கொடுத்து விட்டேன்.

மூக்குத்தியை நெருஞ்சி முள்ளிடம் தந்துவிட்டேன்.

நான், நெருப்பிடம் புகையை கடன் வாங்கியிருக்கிறேன் என்ருள் அவள்.

'ஏன், என்ருன் அவன்!

'புகைதானே, நான் உடுத்துக் கொண்டிருக்கும் இந்தப் புடவை!' என்று கூறினுள்.

அவன் அவள் புடவையைத் தொட்டுப்பார்த்தபடி,

நீரைக் காட்டிலும் நெய் நுட்பமானது; நெய்யைக் காட்டிலும் புகை நுட்பமுடையது; புகையை நெருப்பிடத்தில் கடன் வாங்கியது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இது ஒரு பெண்ணுக்குத் தேவையான கடன். தித்திக்கும் கடன் என்ருன் அவன்.

'அத்தான்' என்ருள்

அணைத்தான் அவன்.

புகைப் புடவையை வாயினுல் ஊதினுன். அது அவள் அங்கத்தில் தங்கவில்லை......!

**கவிஞர் சுரதா**

---

# தமிழுக்கு சேதம் வராமல் தடுக்க....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகக் கொள்கைகள்—இலட்சியங்கள் யாரை மையமாக வைத்து பின்னப்பட்டிருக்கின்றன? யாருக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தார் பாடுபட்டுக் கொண்டிருக்கிருர்கள்? இவைகளை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மொழிக்காகப் போரிட்ட வரலாறு — முப்பதாண்டுக் காலம் மொழிக்காகப் போராடிய வரலாறு வேறு எந்த மாநிலத்திலும் உண்டா? வேறு மாநிலங்களில் மொழியுணர்ச்சி படைத்தவர்கள் இருக்கலாம். ஆனுல் முப்பதாண்டுக் காலம் சளைக்காமல் போராடி இன்றைக்கும் அந்தப் போர்க் கொடியைக் கிழேபோடாமல் ஒருகையில் ஆட்சிக்கொடி—ஒரு கையில் போர்ப் புரட்சிக்கொடி என்கின்ற அளவுக்கு நம் தமிழ்த் தாயைக் காப்பாற்ற மேற்கொண்டுள்ளோம். தமிழ்த் தாய்க்கு ஒரு சேதம் வர வேண்டுமானுல் எங்கள் தேகம் கீழே வீழ்ந்துபட்டுப் பிணங்களை மிதித்துக்கொண்டுதான் எதிரி நுழைய வேண்டுமே அல்லாமல் வேறு எந்த வகையிலும் முடியாது என்று சூளுரைத்துக் கொண்டிருக்கிருேமே அந்த உணர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உணர்ச்சியாகும்.

அதைப் போலவேதான் ஏழை எளிய மக்கள்—அவர்களுடைய நல்வாழ்வு—அவர்களது எதிர்காலம் இவைகளுக்காக ஆக்கப்பூர்வமான காரியங்கள் பலவற்றைச் செய்ய வேண்டும் என்று எண்ணுவதும் எண்ணியதைச் செயல்படுத்துவதும் அதற்கு டில்லி சர்க்காரோடு வாதாடுவதும் இன்றைக்கு இருக்கின்ற தி. மு. கழக அரசினுடைய கொள்கையாக—கடமையாக இருப்பதை நீங்கள் நன்ருக அறிவீர்கள்.

எத்தனையோ முறை இந்தத் தமிழகத்தை வறட்சி சந்தித்திருக்கிறது — எத்தனையோ முறை பெரும் புயல்கள் இந்தத் தமிழகத்தைச் சந்தித்திருக்கிறது — எத்தனையோ முறை இந்தத் தமிழகத்திற்கு பெரிய பெரிய பிரளயங்கள் வந்திருக்கின்றன: அந்த நேரத்திலெல்லாம் இங்கே இருந்த பழைய காங்கிரஸ் அரசு திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக் கொண்ட முயற்சிகளை எடுத்துக்கொண்டதா? இல்லை!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அண்ணுவை இழந்த பிறகு பெரியதோர் வறட்சியை இங்கே சந்திக்க வேண்டியிருந்தது. வறட்சி வந்துவிட்டதே என்று சும்மா இருக்காமல் உடனடியாக 17 அல்லது 18 கோடி ரூபாயை தமிழகத்திலே இருக்கும் கிராமப் பகுதிகளுக்கு வாரியிறைத்து ஆங்காங்கே செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் செய்து ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களை தரித்திரம் தீண்டாமல் வறுமை கொட்டாமல் — அவர்கள் இல்லத்தில் இல்லாமை நெளியாமல் — வறுமையின் கோரக் கரங்கள் கிராமாந்திர மக்களைத் தொட்டு விளையாடாமல் காத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு உண்டு.

இவைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்த்துடிப்பான சக்திகளாகும். மொழிக்காகவும்—நாட்டுக்காகவும்-நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்காகவும் வாதாடவும் அவர்களுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டவும் தி. மு. கழகம் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு வெற்றிதான் 71-ல் நடைபெற்ற தேர்தலில் நீங்கள் தந்த தீர்ப்பாகும்.

பதினைந்தாக இருந்தோம்—ஐம்பதாக உயர்ந்தோம்—138 ஆக ஆனேம்—இன்றைக்கு 183 ஆக ஆகியிருக்கிருேம் என்ருல் பதவிகளை நமக்குப் பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் இல்லாமல்—மக்களுக்குப் பணிபுரிவதால்தான். அமைச்சர்களாக ஆகிவிட்டோம்; ஆகா இனிமேல் நமக்கென்ன குறை இதுவல்லவோ பெரிய அந்தஸ்து—போலிசார் படைசூழ்ந்து வருகிருர்கள்—அதிகாரிகள் நம்மைக் கண்டதும் கைக் கூப்புகிருர்கள் என்று அந்த அந்தஸ்திலே நாங்கள் மயங்கிக் கிடக்கவில்லை. ஆயிரம் அதிகாரிகள் எங்களைப் பார்த்து கையெடுத்து வணங்குகின்ற நிலையில் எங்களுக்கு ஏற்படும் உணர்ச்சியை விட சாதாரண ஏழைத்தொழிலாளி எங்களைப் பார்த்துக் [illegible] உணர்வு மகத்தானது—மகத்தானது என்று சொல்லி அந்தப் புன்னகை தமிழகமெங்கும் பரவிட—திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து பணியாற்றும்; அதற்கு உங்கள் ஆதரவும் தொடர்ந்து இருக்கவேண்டும்.

## 'பீப்பிள்ஸ் வில்' ஆசிரியரின் வேண்டுகோள்!

'பீப்பிள்ஸ் வில்' ஆங்கில ஏட்டின் ஆசிரியர் பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளார்:—

''பீப்பிள்ஸ் வில்'' (Peoples Will) என்ற ஆங்கில மாதாந்த ஏட்டிற்கு நாட்டின் நாலாபக்கத்திலிருந்தும் சந்தா விபரம் கோரி நாளாந்தம் பல அன்பர்கள் எழுதுவதால் தயவு செய்து சந்தா அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ரூபா பத்து (10) மணி ஓடர் அனுப்பும்படி வேண்டப்படுகின்ருர்கள்— அன்பளிப்புத் தொகையையும் இதே விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும் — விலாசம் — மு. பரராசசிங்கம், எண் 676, காலி வீதி, கொழும்பு — 3.

---

அண்ணுவின அறிவுரை!

பொது மக்களின் கட்டுப்பாடான கிளர்ச்சியும், அந்தக் கிளர்ச்சியை நடத்திச் செல்லும் தலைவர்களுக்குக் கஷ்ட நஷ்டங்களை ஏற்கும் துணிவும் அத்தகைய கிளர்ச்சியை ஆதரிக்கும் பண்புள்ள பத்திரிகையின் பலமும் ஒன்று கூடினுல் மமதை கொண்ட எந்த ஆட்சியையும் மாற்றிவிட முடியும்—

'அண்ணு'

---

## தீக்குள்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் கூறவேண்டும். மேலே உயர்ந்திருந்த ஒரு கொத்து மலர்களை எட்டிப் பறிக்கக் கையை நீட்டியபோது, அவள் விழிகளை யாரோ பின்புறம் நின்று கைகளால் மறைத்துப்பிடித்துக் கொண்டனர்.

'யாரது விடுங்கள் கையை' என்று கூறித் திமிறித் திரும்பினுள் பானுமதி. அந்த வேகத்தில் கையிலிருந்த மலர்த்தட்டும் கீழே விழுந்தது. அவள் எதிரே ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான்: அவன் காலடியில் மலர்த் தட்டும் மலர்களும் குவிந்து கிடந்தன.

''மன்னிக்க வேண்டும்: நான் பாரதி என்று நினைத்து......'' என்று அவன் தயங்கினுன். அவன் முகத்தில் தவறு செய்ததற்கான பயவுணர்வுகள் தோன்றியிருந்தன,

''பரவாயில்லை: பாரதி என்று தானே தெரியாமல்......'' என்று பானு பதில் கூறினுள்: ஆனுல் அவள் மனத்தில் அவனை எங்கோ பார்த்த ஞாபகம்.

''தெய்வத்துக்குச் சமர்ப்பணமாக வேண்டிய மலர்கள். என்னுல்......'' என்று கூறி, மலர்த் தட்டை எடுத்து அவளிடம் கொடுத்து விட்டு வீடு நோக்கிச் சென்ருன்'




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சோசலிசப்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு அதனால் வரும் சுயராச்சியத்தை எப்படி ஏற்றுக்கொள்ளமாட்டேனோ அதுபோலத் தாய்மொழியைப் புறக்கணித்து விட்டு வரும் சுயராச்சியத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் எனக் கூறியதை பாதரட்சை தாங்கும் பாதகர் கூட்டமும் அவர்களது எசமானத் தலைவர்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஈழநாட்டில் வாழ்பவர்கள் நாட்டுப்பற்றற்றவர்களல்ல. எனினும் அதுதான் சில மக்களது துணிவான முடிவாயிருப்பின் மகாத்மா காந்தியின் வாக்குப்படி அது பிழையானதுமில்லையே.

ஜனநாயக சோசலிச நாடாக ஈழம் மிளிருவதாகக் கூறும் சோணகிரிகள் தேசிய சமாதானம் நிலைக்க வேண்டுமெனக் கூப்பாடு போடுவது பொருந்தாத வரட்டு வாதமாகும். முன்பின் முரணில்லாத ஜனநாயகமென்றால் நாட்டின் சகல பிரசைகளுக்கும் அவர்களது அடிப்படை உரிமைகளை ஏற்றத்தாழ்வின்றி வழங்குவதோடு, அவற்றை உத்தரவாதப்படுத்துவதுமாகும்.

அடிப்படை உரிமைகளில் ஒன்றுதான் மொழியுரிமை என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. எனவே, இச்சந்தர்ப்பத்தில் சோசலிசம் பேசும் நாம் தமிழரென்ற 'ரோச' லிசம் இல்லாத தரகர் கூட்டம்— முற்போக்குக்கு முழு விளக்கம் புரியாத சமதாமக் கூட்டம் லெனின் அவர்கள் கூறிய 'தேசிய சமாதானமென்பது முனபின் முரணில்லாத ஜனநாயகத் தன்மை கொண்ட நாடுகளில் தான் கைகூடியிருக்கின்றது' என்னும் பேருண்மையைப் புரிந்து கொண்டு ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க விரும்பினால்,

நாட்டுப்பற்றுள்ள சமுதாயத்தைப் படைக்க விரும்பினால்,

நாட்டில் தேசிய சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டுமென விரும்பினால், உண்மையான சோசலிசம் இந்நாட்டில் தழைத்து ஓங்க வேண்டுமென விரும்பினால்,

முதலாளி வர்க்கத்தினால் மூட்டிவிடப்பட்டு இன்று சோசலிசத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் மொழிப்பிரச்சினைக்கு உடன் முடிவு காண வேண்டியது சோசலிசக் கர்த்தாக்களின் கடமையல்லவா? மேற்படிப் பணியை மேன்மையுடன் செய்ய சமதர்மவாதிகள் முன்வருவரா?

## குடியேற்றத் திட்டங்களினால்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் தொகையின் அடிப்படையில் புதிய தேர்தல் தொகுதிகள் வரையறுக்கப்பட வேண்டுமென்று கோரும் தமிழரசுக் கட்சியின் திருத்தத்தை உடுவில் பா. உ. முன்மொழிந்து பேசினார். இத்திருத்தத்தை ஆறுவது அடிப்படைத் தீர்மானத்துக்கு தமிழரசுக்கட்சி கொண்டுவந்திருந்தது.

திரு. தர்மலிங்கம் பேசும் போது கூறியதாவது:-

இன்றுள்ள தேர்தல் முறையில் ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே பெறுமதி இருக்கவேண்டும் என்ற அடிப்படைத் தத்துவம் அழிக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் பண்டாரவளையிலும் பிபிலையிலும், உள்ள பிரஜைகளின் தொகை சமமாக இருந்தால் மட்டும் போதாது; பண்டாரவளையிலும் கோட்டையிலும் உள்ள பிரஜைகளின் தொகையும் சமமாக இருக்க வேண்டுமென நாம் கூறுகிறோம்.

சனநாயக அடிப்படையில் ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே பெறுமதி இருக்கவேண்டும்: ஆனால் இன்றைய தொகுதி நிர்ணய முறையின்படி அப் பெறுமதி இல்லாமல் போய் விட்டது:

இப்போதுள்ள நடைமுறையின்படி பசறைத் தொகுதியில் 15,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். ஆனால் கோட்டை, உடுவில் போன்ற ஏனைய சில தொகுதிகளில் 60,000 வாக்காளர்களும் இருக்கிறார்கள்;

பசறையிலுள்ள ஒரு வாக்காளனையும் கோட்டையிலுள்ள ஒரு வாக்காளனையும் எடுத்துப்பார்க்கும் பொழுது பசறை வாக்காளனின் வாக்கின் பெறுமதி கோட்டை வாக்காளனின் வாக்கின் பெறுமதியிலும் பார்க்க 4.2 சத விகிதம் உயர்ந்துள்ளது. இதைப் போல பல உதாரணங்களைக் காட்டலாம்:

மாகாண அடிப்படையில் பார்க்கும் பொழுதும் மலைநாட்டு மூன்று மாகாணங்களில் அவர்களது பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகமானதாகும்: மேற்கு மாகாணத்தின் 17 லட்சம் வாக்காளர்கள் முப்பத்தி ஐந்து பிரதிநிதிகளை இச்சபைக்கு அனுப்புகின்றனர்: ஆனால் மலைநாட்டு மூன்று மாகாணங்களிலும் உள்ள பதினைந்து லட்சம் வாக்காளர்கள் இச்சபைக்கு 35 பிரதிநிதிகளை அனுப்புகின்றனர். மேற்கு, தெற்கு மாகாணங்களில் 25 லட்சம் வாக்காளர்கள் வாழ்கின்றனர்: இவர்கள் 54 பிரதிநிதிகளைத்தான் அனுப்ப முடியும்:

இலங்கையின் ஏனைய பகுதிகளில் முப்பது லட்சம் வாக்காளர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் 97 பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்புகின்றனர்; இப்படியான தவறான முறைகளினால்தான் இந்த அரசாங்கத்திற்கு அதிகப்படியான வாக்குகள் பாராளுமன்றத்தில் கிடைத்துள்ளன. ஆகையினால் அரசாங்கத்தின் கருத்துக்கள் நாட்டிலே வாழுகின்ற பெரும் பகுதி மக்களின் கருத்துக்கள் என்று ஒரு பொழுதும் எடுக்க முடியாது. அதனால்தான் இந்த தேர்தல் முறையை மாற்றியமைக்கும்படி கேட்கின்றோம். அதுமட்டுமன்றி இன்றைய தேர்தல் முறை ஸ்டேட் கவுன்ஸிலின் அமைச்சர் சபையினால் சிபார்சு செய்யப்பட்டது: அவர்கள் இந்த தொகுதி நிர்ணய முறையை சிபார்சு செய்ததின் நோக்கம் இந் நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களுக்கு பாராளுமன்றத்தில் போதிய பிரதிநிதித்துவம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்கேயாகும்.

ஆனால் நடைமுறையில் இந்தத் தொகுதி நிர்ணய முறை சிறுபான்மை இனங்களுக்கு பாராளுமன்றத்தில் போதிய பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதனைவிட்டு பெரும்பான்மை இனத்திற்கே செல்வாக்கையும் எண்ணிக்கையையும் அளித்துள்ளது. அதனால்தான் 107 சிங்களப் பிரதிநிதிகள் இருக்க வேண்டிய இடத்தில் 123 பேர் உள்ளார்கள். இதற்காகத்தான் நாங்கள் இன்றைய தொகுதி நிர்ணயமுறையை மாற்றியமைக்கும்படி கேட்கின்றோம். இதனால் நாட்டின் அபிவிருத்திக்கோ, பொருளாதார அபிவிருத்திக்கோ அல்லது குடியேற்றங்களுக்கோ நாம் மாறு என்று கூறவில்லை. உணவு உற்பத்தியும் நாட்டின் அபிவிருத்தியும் அவசியம் என்பதனை ஏற்கின்றோம்: நாங்கள் எதிர்ப்பது எதனையென்றால் குடியேற்றத்தை ஒரு கருவியாக வைத்து சிறுபான்மை மக்களுடைய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைப்பதையேயாகும். பல்வேறு இனங்கள் வாழுகின்ற நாட்டிலே பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் மிகவும் முக்கியமான விஷயமாகும்,

அரசாங்கத்தின் குடியேற்றத்திட்டங்கள் சிறுபான்மை இனங்களுடைய தகுந்த பிரதிநிதித்துவத்திற்கு பங்கம் விளைவிக்கக்கூடாது.

பல்வேறு இனங்கள் வாழும் இந்நாட்டிலே ஒரு இன பாராளுமன்றமாக மாற்ற அரசாங்கங்கள் முயல்வதைத்தான் நாம் கண்டிக்கிறோம்.

## மொழிக் கோரிக்கை;

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, விளையாட்டுத் துறை அமைச்சர் கே. பி. இரத்நாயக்கா ஆகியோரிடமும் மற்றும் பல அரசாங்கக் கட்சிப் பிரமுகர்களிடமும் தமிழரசு பா. உ. க்கள் தனித்தனியாக எடுத்துரைத்திருந்தனர்.

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி தமிழாக இருக்க வேண்டும்.

2. இவ்விரு மாகாணங்களிலும் நீதிமன்ற அலுவல் மொழி தமிழாக இருக்கவேண்டும்.

3. இலங்கையின் எப்பாகத்திலிருந்தாலும்ஒரு தமிழ் பிரஜை அரசுடன் தமிழில்தொடர்புகொண்டு தமிழில் பதில் பெறும் உரிமை இருக்கவேண்டும்.

4. புதிய அரசியலமைப்பில் 1966-ம் ஆண்டு சனவரி 8-ம் நாள் பாராளுமன்றத்தில் நிறைவேறறப்பட்ட தமிழ்மொழி விசேட விதிகள் சட்டமும் சேர்க்கப்படவேண்டும்.

இந்த நான்கு கோரிக்கைகளுமே தமிழரசுக்கட்சி இந்நாட்டுத் தமிழினத்தின் சார்பில் விடுத்த குறைந்தபட்சக் கோரிக்கைகளாகும். இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கப் பாராளுமன்றக் குழுவைக்கூட்டி அதில் விவாதித்துப் பதில சொல்வதாக அரசியல் விவகார அமைச்சர் தமிழரசுத் தலைவர்களுக்கு உறுதியளித்திருந்தார்.

ஆனால் 13-6-71ல் கூடிய அ. பாராளுமன்றக்குழுவில் தமிழரசார் கோரிக்கைகள் பற்றி எதுவும் பேசப்படவேயில்லையென்றும் அதற்குப் பதிலாக அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானம் பத்திலிருந்து மேற்கொண்டு வரும் சகல தீர்மானங்களையும் அப்படியே ஒரு எழுத்தும் மாற்றாமல் ஏற்றுக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சமாதான வழியில் நீட்டிய நேசக்கரத்தை அரசு பற்றிக்கொள்ள மறுத்துவிட்டது. என்பது துலாம்பரமாகிவிட்டது எனவே தமிழர்களின் குறைந்தபட்ச மொழியுரிமைக் கோரிக்கைகளும் மறுக்கப்பட்ட நிலையில், தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணயசபையுடன் தொடர்ந்து ஒத்துழைக்க மறுத்து, அதிலிருந்து வெளியேறுவது நிச்சயம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமான இறுதி முடிவை 21-6-71ல் யாழ்ப்பாணத்தில் கூடும் விசேட பொதுச்சபைக் கூட்டம் எடுக்க இருக்கிறது.

---

மூதவையில்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அரசாங்கம் எடுக்காதிருப்பதையிட்டு வருந்துகிறோம்:

● அரசியல் சட்டங்களுக்கும் அதனோடு சம்பந்தப்பட்ட பிரசாரங்களுக்கும் தடைவிதித்தல் போன்று சாதாரண சனநாயக உரிமைகளைப் பாதிக்கும் வகையில் பொது சனபாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால அதிகாரங்களைப் பிரயோகிப்பதையிட்டு வருந்துகிறோம்:

● சட்டவாக்கங்களைத் தாமதமாக்குவதற்கு செனட் சபையே காரணமென்ற போலியான அடிப்படையின் மீது செனட் சபையை ஒழிப்பதற்காக பாராளுமன்றக் கூட்டத் தொடரைக் கலைத்து இப்போது மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டியது பற்றி வருந்துகிறோம்.

---

## சிங்கள...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பு எல்லாருக்கும் சமமாக பகிர்ந்து கொடுக்கப் படுகிறதா?

### இடையரு அக்கிரமம்

தமிழ்ப் பிரதேசங்களிலே பட்டாளத்தை நிறுவி தமிழ் மக்களை இடையரு அக்கிரமத்துக்கு ஆளாக்கி வருகிறது ஆளும் அரசு. தாய்மார்கள் தெருவிலே பயமின்றி நடமாட முடியாத அவல நிலை, மீனவர் கடலிலே மன அமைதியுடன் சென்று தமது மீன்பிடித் தொழிலைப் பட்டாளத்தின் அட்டகாசத்திற்குப் பயந்து நடத்த முடியாத கோரநிலை, தமிழ் பிரதேசங்களிலே உள்ள அரசாங்க அலுவலங்களிலே சிங்களத் திணிப்பு, ஆங்கிலேயர் காலத்திலே கூட இல்லாத அநீதி, சிங்கள மொழியின் பேரால் சிற்றூழியர்களும் தொழிலாளர்களும் தாதிமாரும் தமிழ் ஆசிரியர்களும் தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றும் கிராம சேவையாளரும், தமிழ்ப் பகுதிகளிலே தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் மூலம் தொழிற் கல்வி கற்பிக்கும் நெசவு ஆசிரியர்களும் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற கட்டாயம் என்பன இன்று நிலவுகின்றன. (தொடரும்)

---

## மன்னிக்க வேண்டுகிறோம்

அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுத் தலைவர்கள் நிகழ்த்திய உரைகளை இந்தவாரம் தருவதாகவாசகர்களுக்கு அறிவித்திருந்தோம். ஆனால் அரசியல் நிர்ணயசபையின் அதிகார அறிக்கை கிடைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தால் இவ்வாரம் அவை இடம் பெறவில்லை. அடுத்த வாரம் இடம்பெறும்.

---

## மலையகத் தமிழருக்கு....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

யப்பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்டுள்ளவர்களுக்கு தொழில் கிடைக்காமல் செய்வதன் மூலம் அவர்களை இந்நாட்டிலிருந்து தாங்களாகவே வெளியேறச் செய்வதே என்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

1967ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டப்படி இலங்கை அரசும் இந்திய அரசும் முறையே, இலங்கை, இந்திய குடியுரிமைகளுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியது தெரிந்ததே. இந்தச் சட்டப்படி இந்தியப் பிரஜைகளாக தங்களைப் பதிவு செய்பவர்கள் அனைவரும் சட்ட பூர்வமாக தமது தொழில் உரிமையை இழந்து விட்டார்கள் என்று கருதப்படுவதற்கோ, இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொண்டவர்களை வேலைக்கு வைத்துக்கொள்வது சட்ட விரோதமென்றோ எதுவித நீதிகளும் இருக்கவில்லை: எனவே இந்தச் சட்டத்தை நம்பி பல்லாயிரக்கணக்கான 'நாடற்ற' மக்கள், இச்சட்டத்தின் கீழ் இந்தியப் பிரஜைகளாக தம்மை பதிவு செய்துகொண்டார்கள்.

1967ம் ஆண்டுச் சட்டத்தை நம்பி இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்து கொண்டுள்ள மலைநாட்டுத் தமிழர்களுக்கு நம்பிக்கைத் துரோகமாகவும் பேரிடியாகவும் அமைந்துள்ளது இப்போது கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டம். இச்சட்டத்தின்படி இந்தியப் பிரஜைகளாகத் தம்மைப் பதிவு செய்து கொண்டோர் சட்ட பூர்வமாக இந்நாட்டில் தத்தம் தொழிலை இழந்து விட்டவர்களாகவே கருதப்படுவர். இவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளும் இலங்கையர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

இப்புதிய சட்டத்தின் நோக்கம், இந்தியப் பிரஜைகளாக தங்களைப் பதிவுசெய்து கொண்டவர்கள், தாமாகவே நாட்டைவிட்டுவெளியேறும் சூழ்நிலையை தோற்றுவிப்பதே என்று சுட்டிக்காட்டப்படுகிறது;

---

அடுத்த வாரம்

**மட்டக்களப்பில் மக்கள் எழுச்சி!**
**ராஜன் கும்பலின் மாபெரும் வீழ்ச்சி!**

கவரிமான்
எழுதும் சுவையான அரசியல் கட்டுரை

● மேயர் தியாகராசாவைக் கவிழ்க்க இரண்டாவது எம். பி. பி. ஆர். செல்வநாயகம் ஓடும் ஓட்டம்.

● இரண்டாவது எம்.பி.யின் சுயரூபத்தைப் புரிந்து மாநகரசபை உறுப்பினர்கள் மாலாவும் கீர்த்தியும் அவரைக் கைவிட்டு ஒதுங்கும் கண்கொள்ளாக் காட்சி.

● தமிழரசார் ஆதரவில் மேயர் தியாகராசா பவனி வரும் தனி அழகு.

இன்னும் பல சுவையான தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


சில தினங்கள் மட்டும்

# 92வது நாள்

சென்ட்ரல்
10, 2, 5-30 மணிக்கு

ராஜேஸ்வரா (மட்டு நகர்)

* சிவாஜிகணேசன் * கே. ஆர். விஜயா


—நடித்த—

# ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்
டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி.ஏ.)
இசை மெல்லிசை மன்னர்: எம். எஸ். விஸ்வநாதன்

விரைவில் எதிர்பாருங்கள்

சுந்தரராஜன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
லக்ஷ்மி



—நடித்த—

# கஸ்தூரி திலகம்

85வது வெற்றி நாள்
செல்லமகால்
மாஸ்டர் பிரபாகர் நடித்த

# வா ராஜா வா

இப்பொழுது காட்சியளிக்கிறது
கெயிட்டி
ரஞ்சன் எம். கே. ராதா நடித்த


# சந்திரலேகா

இப்பொழுது காட்சியளிக்கிறது
சிவாஜிகணேசன் நடித்த
வின்சர் (யாழ் நகர்)

# குருதட்சணை

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்
விரைவில் வருகிறது

# அவரே என் தெய்வம்



இப்பொழுது காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி பிளாஸா

சிவாஜிகணேசன் வாணிஸ்ரீ

சோ, மனோரமா, முத்துராமன், சச்சு,
வி. கே. ராமசாமி, ஜி. சகுந்தலா,
தேங்காய் சீனிவாசன் நடித்த

முக்தா பிலிம்ஸ்



திரைக்கதை வசனம்: சோ,
இசை; வி. குமார்,
டைரக்ஷன்: வி. சீனிவாசன்.

# நிறைகுடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் ஆனி மாதம் 22-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவைமகேசன்